பக்கங்கள்: 12

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 ஆனி 28 வியாழக்கிழமை 13.07.2023 கதிர் 244

# மற்றொரு ஆணைக்குழு அமைக்க சிவில் அமைப்புகள் கடும் எதிர்ப்பு

## வடக்கு கிழகில் உள்ள 15 நிறுவனங்கள் கூட்டறிக்கை

இலங்கையின்ஆளும்தரப்புஅமைக்கவுள்ள தேசியஐக்கியமற்றும்நல்லிணக்கஆணைக் குழுவை ஆதரிக்க முடியாது என்று சிவில் அமைப்புக்கள் ஒன்றிணைந்து தெரிவித் துள்ளன. இது தொடர்பில் அவை கூட்டாக அறிக்கை ஒன்றையும் வெளியிட்டுள்ளன.

இறுதிப் போரில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள், போர்க் குற்றங்கள், மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்கும் நீதியை நிலைநாட்டுவதற்கும் பொறுப்புக்கூறலுக் கும் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று ஐ.நா. மற்றும் பன்னாட்டுச் சமூகம் தொடர்ந்து வலியுறுத்திவரும் நிலையில், ஆளும்தரப்புஇந்தப்புதியஆணைக்குழுவை உருவாக்கத் திட்டமிட்டுள்ளது. அதற்கான நடவடிக்கைகளும்இடம்பெற்றுவருகின்றன.

இந்த நிலையிலேயே வடக்கு கிழக்கைச் சேர்ந்த15சிவில்அமைப்புக்கள்ஒன்றிணைந்து இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளன. மிக நீண்ட அந்த அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளவற்றின் சாராம்சம் வருமாறு: ☞2

## இது ரகசியம் அல்ல!

அண்மைக் காலமாக பொது ஜன பெரமுன தேர்தலை நோக்கிய தனது வீரியமான நகர்வுகளைத் தெற்கில் தொடங்கியுள்ளது. அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ரணிலே பெரமுனவின் வேட்பாளர் என்று அமைச்சர்கள் சிலர் தெரிவிக்கும் கருத்துக்கள் அவர்களின் தனிப்பட்ட கருத்துக்கள், அதற்கும் கட்சிக்கும் எந்தத் தொடர்பும் இல்லை, கட்சி அப்படி எந்த முடிவும் எடுக்கவில்லை, கட்சியின் கொள்கையை முன்னெடுத்துச் செல்பவரே ஜனாதிபதி வேட்பாளராக முன்மொழியப்படுவார் என்று கட்சியின் செயலாளர் பகிரங்கமாவே அறிவித்தார்.

ஒரு வருடத்திற்கு முன்னர் இதே காலப் பகுதியில் பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வெளியே தலைகாட்டப் பயந்துகொண்டிருந்தனர். மக்களால் அவர்கள் ஓட ஓட விரட்டப்பட்டனர். தாங்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்பதை வெளிக்காட்டப் பயந்து நடுங் கிக்கொண்டிருந்தனர். அந்தநிலையில் ☞2

## கிலோ ரூ. 95 படி இன்று முதல் நெல் கொள்முதல்

கிளிநொச்சி மாவட்டத்தில் ஒரு கிலோ நெல் ரூபாய் 95 படி நெல் சந்தைப்படுத்தல் சபையால் கொள்முதல் செய்யப்படும் என்று மீன்பிடித்துறைஅமைச்சர்டக்ளஸ்தேவானந்தா தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் அவர் இதனை அறிவித்தார். கூட்டம் நேற்று அமைச்சர் தலைமையில் நடைபெற்றது நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாவட்டச் செயலாளர், அரச நிறுவனங்களின் உயர் அதிகாரிகள், கிளிநொச்சி மாவட்டத்தின் கமக்கார அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

கூட்டத்தில் நெல்லுக்கு ஆட்சியா ளர்களிடமிருந்து உத்தரவாத ☞2

யாழ்ப்பாணத்திலிருந்து

## ஹெரோயின் கடத்திய குற்றவாளிக்குத் தூக்கு

### வவுனியா மேல்நீதிமன்றம் விதிப்பு

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கி விற்பனைக்காக ஒரு கிலோ 135 கிராம் ஹெரோயின் போதைப்பொருளைக் கொண்டு சென்ற நபருக்கு வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் தூக்குத் தண்டனை வழங்கி தீர்ப்பளித்தார். 6 வருடங்களாகத் தொடர்ந்து நடந்த விசாரணைகளின் பின்னர் இந்தத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

2017 நவம்பர் 9 வவு னியா தலைமைப் பொலிஸ் நிலையத்திற்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து, வவுனியாபொலிஸ்நிலையப் பொலிஸ் பரிசோதகர் ராஜ பக்ச தலைமையில் பொலி ஸார், அன்றைய தினம் இரவு 8.30 மணியளவில் வவுனியா பழைய பஸ் நிலையம் முன்பாக யாழில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்றபஸ்களைச்சோதனை யிட்டனர்.

இதன்போதுபஸ்ஒன்றில் பயணித்த குடும்பஸ்தர் தன் வசம் வைத்திருந்த பை ஒன் றில் இருந்து ஹெரோயின் போதைப்பொருள் கண்டு பிடிக்கப்பட்டது. இதைய டுத்துஹெரோயின்போதைப் பொருள் பொலிஸா ☞2

கடற்படை முகாமுக்கான

## காணி சுவீகரிப்பை எதிர்த்து மண்டைதீவில் போராட்டம்

### நேற்றுக் கைவிடப்பட்டது அளவீட்டுப் பணி



யாழ்ப்பாணம், மண்டை தீவில் அமைந்துள்ள கடற்ப டை முகாகமுக்குத் தனியா ரின் காணிகளைச் சுவீகரிப்ப தற்கு அரசியல்வாதிகள் மற் றும்காணிஉரிமையாளர்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்துப் போராட்டம் நடத்தியதை அடுத்து காணி அளவீட்டுப் பணிகள் நிறுத்தப்பட்டன.

வேலணைப் பிரதேச செயலாளர் ☞2

## மண்டைதீவிலுள்ள கிணறு இனப்படுகொலைச் சாட்சி

### சிறீதரன் எம்பி அங்கு தெரிவிப்பு



(ந.லோகதயாளன்)

தமிழர்கள் பலரைப் படு கொலை செய்து போட்டு மூடப்பட்ட மண்டைதீவு கிண ற்றைஆய்வுக்குட்படுத்தினால் இனப்படுகொலையின் சாட் சியங்கள் வெளியாகும் என தமிழ் தேசிய கூட்டமைப் பின் நாடாளுமன்ற உறுப்பி னர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

யாழ். மாவட்டம், ☞2

# இந்திய - இலங்கை ஒப்பந்தத்தினை முழுதாக அமுல்ப்படுத்த கூறுங்கள்

## மோடிக்கான செய்தியாக தூதரிடம் சம்பந்தர் எடுத்துரைப்பு

(ந.லோகதயாளன்).

இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங் கவை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி சந்திக் கும்போது, இந்திய-இலங்கைஒப்பத்தில் நடைமுறைப்படுத்தப்படாத விடயங்களைநடைமுறைப்படுத் தும்படிவலியுறுத்தவேண்டும் என்றுதெரிவித்துள்ளார்தமிழ் அரசுக் கட்சியின் பெருந் தலைவர் இரா. சம்பந்தன்.

கொழும்பில் உள்ள சம்பந்தரின் இல்லத்தில் நேற்று அவரைச் சந்தித்து ஜனாதிபதியின் இந்தியப் பயணம் குறித்து ஆலோ சித்தகொழும்புக்கானஇந்தியத் தூவர்கோபால்பாக்லேயிடமே அவர் இவ்வாறு வலியுறுத் தினார்.

இந்திய இலங்கை ஒப்பந்த காலத்திலும் நாடா ளுமன்ற உறுப்பி னராக இருந்தவர் ரணில் விக்கி ரமசிங்க.ஒப்பந்தத்தைச்செய்த ஜெ.ஆர்.ஜேவர்த்த னவுடன் கூடஇருந்தே சகலதையும் தெரிந்தவர். அதனால் இந்திய - இலங்கை ஒப்பந் தத்தில் நடைமுறைப்படுத்தப் படாத விடயங்களை அவர் நடைமுறைப்படுத்த இந்தியப் பிரதமர் அவரிடம் வலியுறுத் திக் கூறவேண்டும் என இரா.சம்பந்தனால் இந்தச் சந்திப்பில் இந்தியப் பிரத மருக்கான தனது செய்தியா கத் தூதுவரிடம் வலியுறுத் தினார்.

இதனை உடன் பாரதப் பிரதமரின்கவனத்திற்குத்தான் கொண்டுவருவார்என்றுஇந்தி யத் தூதுவர் கோபால் பாக்கிலேவாக்குறுதியளித்தார் என்று தெரிவிக் கப்பட்டது. அதேநேரம் மோடி - ரணில் சந்திப்புக்கு முன்னதாக மீண்டும் ஒரு தடவை இரு தரப்பினரும் இது தொடர்பில் சந்தித்து கலந்துரையாடவும் தீர்மானிக்கப்பட்டது.

இந்தியத் தூதுவ ருடன் துணைத் தூதுவர் மற்றும்தூதரகஅரசியல்செய லாளரும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டிருந்தனர். இரா.சம்பந்தனுடன் எம்.ஏ. சுமந்திரன் சந்திப்பில் கலந்துகொண்டிருந்தார்.

## கடற்படையினர் முற்றாக அகற்றப்பட்டாக வேண்டும்

### செல்வராசா கஜேந்திரன் வலியுறுத்து

(ந.லோகதயாளன்)

தமிழர்களதுநிலங்களை சிங்களப் பேரினவாத நிகழ்ச்சி நிரலுக்கமைய ஆக் கிரமித்துள்ள கடற்படை முற்றாக வெளியேற்றப்பட வேண்டும்எனநாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் வேல ணைப் பிரதேச செயளாளர் பிரிவிற்குட்பட்ட மண்டைதீவு கிழக்கு கிராம சேவகர் பிரிவிற்குட்பட்ட 29 தனி நபர்களுக்குச் சொந்தமான 18 ஏக்கருக்கு அதிகமான காணிளின் சுவீகரிப்பை தடுத்து நிறுத்தக் கோரி நேற் றைய தினம் வேலுசுமண கடற்படை முகாமிற்கு முன் னால் எதிர்ப்புப் போராட்டம் றடத்தக்கட்டது.

இந்நிலையில் குறித்த போராட்டத்தின் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய கஜேந்திரன்தெரிவித்ததாவது:

தமிழரது நிலங்களை சிங்களப்பேரினவாதநிகழ்ச்சி நிரலுக்கமையஆக்கிர மித்துள்ள கடற்படை ☞2

நீண்ட முயற்சியின் பின்னர்

## ஜூலை 21 புதுடில்லியில் ரனில் - மோடி சந்திப்பு



நீண்ட முயற்சியின் பின் ஜூலை 21 இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக் கும்இலங்கை ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்கவுக்கும் இடையில் உத்தியோகபூர்வ சந்திப்பு இடம்பெறவுள்ளது.

ரணில் விக்கிர ☞2

## இந்தியாவிற்குக் கடத்தப்பட்ட 8 கி. தங்கம்கடலில் சிக்கியது



(ந.லோகதயாளன்)

இலங்கையில் இருந்து இந்தியாவிற்குகடல்வழியாக கடத்திச்செல்லப்பட்ட 8 கிலோ தங்கத்தையும் அதனைக் கடத்திச்சென்ற இருவரையும் இலங்கை கடற்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

புத்தளத்தில் இருந்து இந்தியா நோக்கி சந்தேகத் திற்கிடமாகப் பயணித்த படகினை அவதானித்த கடற்படையினர் அதனை வழிமறித்தனர். ஆனால் படகு நிற்காது தப்பிச் செல்ல முயற்சித்துள்ளது. விரட்டிச் சென்றபடையினர்அதனைக் கைப்பற்றி அதிலிருந்த இரு வரையும் கைது செய்தனர்.

கைப்பற்றப்பட்ட படகில் கடற்படையினர் நடத்திய தேடுதலில் நன்கு பொதி செய்யப்பட்டு மறைத்து வைக்கப்பட்டிருந்த ☞2

## வழக்குத் தாக்கல்

சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர்ஜயந்தகெட்டகொட முன்வைத்துள்ள உள்ளூரா ட்சி சபைகள் சட்டத் திருத்தம் தொடர்பான தனிநபர் பிரேர ணையை எதிர்த்து பவ்ரல் அமைப்புஉயர்நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல்செய்துள்ளது. இந்தப்பிரேரணையில்உள்ள சில சரத்துக்கள் அரசமைப் புக்கு முரணானவை என்று அந்த அமைப்பு தெரிவித் துள்ளது.

அதனால் அந்தச் சட்ட மூலத்தை நாடாளு ☞2

நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்ப

## 3 நாடுகளின் தூதர்களுடன் அமைச்சர் அலி சப்ரி பேச்சு

நல்லிணக்கம் மற்றும் அமைதியைக் கட்டியெ ழுப்புதல் குறித்து தென்னா பிரிக்கா, சுவிற்ஸர்லாந்து மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளுடன் அயலுறவுத் துறை அமைச்சர் அலி சப்ரி நேற்று பேச்சு நடத்தினார்.

தேசிய ஐக்கிய மற் றும் நல்லிணக்க ஆணைக் குழுவை உருவாக்குவதற் கான முயற்சிகளில் ஆளும் தரப்பு ஈடுபட்டுவரும் நிலை யில், இந்தமுயற்சிகளுக்கு தென்னாபிரிக்கா, சுவிற் ஸர்லாந்து மற்றும் ☞2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

இருந்த தப்பவே அவர்கள் ரணில் விக்கிரமசிங்கவை நாட்டின்பிரதமராக்கின்றனர். அதன்மூலம் அவர் ஜனாதிபதியுமானார்.

ஆனால், இன்று பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் துணிந்து மக்கள் முன் வருகிறார்கள். அடுத்த தேர்தலில் வெற்றி குறித்துப் பேசுகின்றார்கள். தாங்களே மீண்டும் ஆட்சியைப்பிடிப்போம்என்றுசூளுரைக்கின்றார்கள். அடுத்த ஆண்டில் வரப்போகின்ற தேர்தலுக்கான தயார்ப்படுத்தலாகவே இத்தகைய நகர்வுகளை அவர்கள் மேற்கொண்டு வருகின்றார்கள்.

தமது கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்சதான் என்று அவர்கள் தெரிவித்தாலும் அவரை முன்வைத்து இந்த நகர்வுகள் இடம்பெறுவதாக இல்லை என்று விடயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன. கடந்த சில வாரங்களாக மகிந்த ராஜபக்சவைப் பொது நிகழ்வுகள் எதிலும் காணவில்லை, அரசியல் சந்திப்புக்களிலும்கூட அவர் ஈடுபடவில்லை. இது அவரது உடல் நலன் குறித்த அக்கறைகளையும் ஏற்படுத்தியிருக்கின்றது. இந்தப் பின்னணியில்யாரை முன்னிலைப்படுத்தி அடுத்த தேர்தலுக்குப் பொதுஜனபெரமுனதயாராகப் பார்க்கின்றது என்கிற கேள்வி இருக்கின்றது.

கட்சிக்குள் இந்தச் சந்தர்ப்பத்தைப்பயன்படுத்தித்தன்னைப் பலப்படுத்தி வரும் நாமல் ராஜபக்ச அந்த இடம் நோக்கி நகர்வதில் குறியாக இருக்கின்றார் என்கின்றன கட்சித் தரப்புகள். தேர்தலுக்கு இடையில் எப்படியாவது ரணில் தரப்பையும் சஜித் தரப்பையும் ஒன்றாக்கி ஆளும்தரப்பாக்கிவிட்டு, பெரமுனவை எதிர்க்கட்சி வரிசையில் அமர்த்திவிட்டால், அதன்மூலம்ஆளும்தரப்பை கடுமையாக விமர்சித்து இழந்துபோன செல்வாக்கை மீட்டுவிட முடியும் என்று நாமல்நம்புகிறார்என்கின்றன அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள். இதன் மூலம் அடுத்தஜனாதிபதித்தேர்தலில் தன்னை முன்னிறுத்தும் வாய்ப்பை ஏற்படுத்த முடியும் என்பதுநாமலின் கணிப்பாக இருக்கிறது என்றும் அந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

ஜனாதிபதி வேட்பாளராக நாமல் தெரிவு செய்யப்படுவதற்கு அவரது வயது ஒரு தடையாக இருக்கும் என்று சிலர் சுட்டிக்காட்டினாலும், தற்போதிருக்கும் நிலையில் ராஜபக்சகுடும்பத்தவர்ஒருவர் இல்லாமல் பெரமுனவால் சரிவில் இருந்து மீண்டுவர முடியாது என்றும் அதற்கு பசில் அல்லது சமல் பொருத் தமானவர்களாக இருக்கமாட்டார்கள் என்றும் சுட்டிக்காட்டும் நாமல் தரப்பினர், புதிய மற்றும் இளம் முகமான நாமலே மக்கள் மத்தியில் அதிகம் கவர்ச்சியுடையவராக இருப்பார் என்கின்றன. அதனால் நாமலை முன்னிறுத்தியே கட்சி தேர்தலை நோக்கிய நகர்வுகளில் இறங்கியுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

அடுத்த மூன்று மாத காலங்களுக்குள் பெரமுனவை எதிர்க் கட்சி வரிசையில் அமரவைத்து எதிர்க் கட்சித் தலைவர் பதவியைப் பிடிக்க முடிந்தால் மட்டுமே நாமலின் இந்தக் கனவு பலிக்கும். எனவே அதற்கான தீவிர முயற்சியில் இறங்கியிருக்கிறதாம் நாமல் முகாம்.

......................

இந்தியப் பிரதமர் - இலங்கை ஜனாதிபதி சந்திப்பு உறுதியாகிவிட்ட நிலையில் அது தொடர்பான அரசியல் பரபரப்புகளுக்குக் குறைவில்லை. இந்தியத் தூதுவர் நேற்று தமிழ் அரசுக் கட்சிப் பெருந் தலைவர் இரா.சம்பந்தனை அவரது இல்லத்திற்கே சென்று நேரில் சந்தித்துப் பேசினார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இந்தியப் பயணத்திற்கான ஏற்பாடுகளைக் கவனிக்கவென புதுடில்லியில் இருந்து வந்திருந்த அயலுறவுத்துறைச் செயலர், ஜனாதிபதி ரணில் மற்றும் அவரது ஆலோசகர் சாகல ரத்நாயக்க ஆகியோரைச் சந்தித்துப் பேசியிருந்தார். ஆனால், சம்பந்தரையோ வேறு கட்சித் தலைவர்களையோ சந்தித்துப் பேசவில்லை.

இதையடுத்தே தூதுவர் சம்பந்தரை நேரில் சந்தித்து அவரது கருத்துக்களைப் பெற்று புதுடில்லிக்கு அனுப்பி வைத்திருக்கிறார்.

இந்தப் பின்னணியில் அமெரிக்கத் தூதுவரும் இரா.சம்பந்தன் மற்றும் சுமந்திரனை இன்று சந்தித்துப் பேசவுள்ளார். ஜனாதிபதியின் இந்தியப் பயணம் தொடர்பாகவே இந்தச் சந்திப்பில் ஆராயப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அமெரிக்கத் தூதுவர் ஜனநாயகக் கூட்டணித்தலைவர்களையும் சந்தித்துப் பேசுவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

**இடிமின்னல்**
(idiminnal23@gmail.com)

## மற்றொரு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேசிய ஐக்கிய மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை அமைப்பதற்கான ஆளும் தரப்பின் திட்டம் குறித்து ஆழ்ந்த கரிசஷ்ஷையை வெளியிட்டு நாங்கள் இந்த அறிக்கையை வெளியிடுகின்றோம்.

கடந்த காலங்களில் இடம்பெற்ற விடயங்களுக்கு தீர்வை காண்பதற்கும் சமூகங்கள் எதிர்கொண்ட துயரங்களுக்கு தீர்வைக் காண்பதற்கும் உண்மையை கண்டறிதல்மிகமுக்கியமான விடயம் என நாங்கள் கருதுகின்ற அதேவேளை, குறிப்பாக நாட்டில் போரால் பாதிக்கப்பட்டபகுதிகளில், பின்வரும் காரணங்களுக்காக இந்தப் பொறிமுறைக்கு எங்களால் ஆதரவை வழங்க முடியாதுள்ளது.

இலங்கையில்உருவாக்கப்பட்ட எந்த உள்நாட்டு ஆணைக்குழு அல்லது தீர்ப்பாயம் குறித்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு நம்பிக்கையில்லை.

இலங்கை ஆளும் தரப்புகளால் உருவாக்கப்பட்ட இவ்வாறான ஆணைக்குழுக்கள் உண்மையை கண்டறியும் தொடர் செயற்முறையை, குற்றமிழைத்தோரைப் பொறுப்புக்கூறக் கோரும்பாதிக்கப்பட்டோரின் செயற்பாட்டை இழுத்தடிக்கும் நோக்கத்தைக் கொண்டவையாகவே அமைந்துள்ளன.

முக்கிய செயற்பாட்டாளர்களும்அரசியல்வாதிகளும் காலத்திற்கு காலம் ஆளும் தரப்புகள் ஒருபோதும் இராணுவத்தினருக்கும் தேசப்பற்றுள்ள சக்திகளுக்கும் துரோகமிழைக்காது என தெரிவித்துவந்துள்ளனர்.

நீதிப்பொறிமுறையொன்று இல்லாத நிலையிலேயேதேசியஐக்கியமற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அமைக்கப்படுகின்றது - 2015 இல் ஆளும் தரப்பு நான்கு நிலைமாற்று நீதிக்காலகட்டமைப்புகளை உருவாக்குவதாக வாக்குறுதியளித்தது. இதில் விசேட நீதிபதிகள் அடங்கிய நீதிப்பொறிமுறையும் ஒன்று ஆனால் 8 வருடத்திற்கு பின்னர் இன்றுவரை அது நடைமுறைக்கு வரவில்லை.

நீதிப்பொறிமுறையை உருவாக்குவதில் ஏற்பட்ட தோல்வி காரணமாக நம்பகதன்மை மிக்க பொறிமுறை மூலம் நீதியை தேடுவதற்கு பாதிக்கப்பட்டவர்களிற்கு வாய்ப்பு மறுக்கப்பட்டுள்ளது- அவர்கள் உள்நாட்டு பொறிமுறை குறித்து நம்பகதன்மையை இழந்துள்ளனர்.

கடந்தகால குற்றங்களுக்கான பொறுப்புக்கூறல் இன்மை தண்டனையிலிருந்து விலக்களிக்கப்படுதலை மேலும் ஆழமாக்கியுள்ளது.

கடந்த 30 வருடங்களில் பல ஆளும் தரப்புக்கள் அமைத்துள்ள ஆணைக்குழுக்களில்ஒன்றேஉண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு. இந்தக் கட்டமைப்பு பரந்துபட்ட பரிந்துரைகளுடன் அறிக்கையை வெளியிட்டது, இந்த பரிந்துரைகள் பல இன்னமும் நடைமுறைப்படுத்தப் படவில்லை.

ஆகவே இனிவரும் தேசிய ஐக்கிய மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் நடைமுறைப் படுத்தப்படும் என்பதற்கு என்ன உத்தரவாதம்?

இவ்வாறான சூழ்நிலையில் பாதிக்கப்பட்டவர்களை இன்னுமொருஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளிக்க அழைப்பு விடுப்பது நியாயமானதா?

குறிப்பாகப் பாதிக்கப்பட்டவர்கள்மீண்டும்மனஉளைச்சலையும் உண்மையை தெரிவித்தமைக்காகஅச்சுறுத்தலையும் அனுபவிக்கக்கூடிய ஒருசூழ்நிலையில்அவர்களை இன்னுமொருஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமழைக்க அழைப்பது நியாயமானதா

தேசிய ஐக்கிய மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவில் வெளிநாட்டு நிபுணர்களை இணைத்துக் கொள்வது குறித்து தகவல்கள் வெளியாகின்றன. கடந்த காலங்களில் இலங்கை வெளிநாட்டுநிபுணத்துவத்தை பயன்படுத்தியுள்ளது.

புகழ்பெற்ற நிபுணர்களின் சர்வதேச சுயாதீன குழுவிற்கு இந்தியாவின் முன்னாள் பிரதம நீதிபதி பிஎன் பகவதி தலைமை வகித்தார், ஜப்பானின் பேராசிரியர் ஒருவரும் அதில் இடம்பெற்றிருந்தார். எனினும் ஆளும் தரப்பின் தலையீடுகள் காரணமாக 2008இல் அந்தக் குழு பதவி விலகியது.

இலங்கையில் மனித புதைகுழிகள் கண்டுபிடிக்கப்படுவது நாளாந்த நிகழ்வாகிவிட்டது ஆனால் ஆளும் தரப்பில் இது குறித்து நம்பகதன்மை மிக்க விசாரணைகளை நடத்தும் நோக்கம் எதுவுமில்லை - என்றுதெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஹெரோயின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரால் மீட்கப்பட்டதுடன் அதை வைத்திருந்த குடும்பஸ்தரும் கைது செய்யப்பட்டிருந்தார்.

மீட்கப்பட்ட ஹெரோயின் போதைப்பொருள் ஒரு கிலோ 135 கிராம் நிறை உடையது என்பதுடன், கலப்படம் அற்ற தூய ஹெரோயின் என்பதும் பொலிஸ் விசாரணை மற்றும் சோதனைகளில் தெரியவந்தது.

இதையடுத்து குறித்த நபர் கைது செய்யப்பட்டு வவுனியா நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைகள் இடம்பெற்று விளக்கமறியில் இருந்து பிணையில் விடுவிக்கப்பட்டுருந்தார்.

ஒருகிலோ135கிராம்தூய ஹெரோயினை உடமையில் வைத்திருந்தமை மற்றும் விற்பனைக்காகக் கொண்டு சென்றமைதொடர்பில்சட்டமா அதிபர் திணைக்களத்தால் வவுனியா மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்கப்பட்டு, அரச சட்டத்தரணிகளான தர்சிகா திருக்குமாரன் மற்றும் ஆறுமுகம் தனுஜன் ஆகியோரின் நெறிப்படுத்தலில் வழக்கு விசாரணைகள் இடம்பெற்று வந்தன.

குறித்த வழக்கு விசாரணைகளில் குறித்த நபர் ஒரு கிலோ 135 கிராம் தூய ஹெரோயினை உடமையில் வைத்திருந்தமை மற்றும் விற்பனைக்காக எடுத்துச் சென்றமை என்பன எந்தவித சந்தேகத்துக்கிடமின்றி உறுதிப்படுத்தப்பட்டமையால் குறித்த நபருக்கு வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் மரண தண்டனை வழங்கி நேற்று (12) தீர்ப்பளித்தார்.

யாழ். நாவற்குழியைச் சேர்ந்தவரும் தற்போது வவுனியாவில் வசித்து வருபவருமான கந்தையா தியாகராஜா என்ற 55 வயது குடும்பஸ்தருக்கே 6 வருடங்களின் பின் இவ்வாறு தூக்குத் தண்டனைத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. (100)

## காணி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரிவின் மண்டைதீவு கிழக் கில் ஜே/07 கிராம சேவகர் பிரிவில் உள்ள 29 பேருக்குச் சொந்தமான 18 ஏக்கருக்கும் அதிகமான தனியார் காணிகளை வெலிசுமன கடற்படை முகாம் அமைப்பதற்காகச் சுவீகரிக்கும்நோக்கில்நேற்றுஅளவீட்டு செய்வதற்கு நில அளவைத் திணைக்களத்தினரால் உத்தியோகபூர்வமாக அறிவித்திருந்தது.

இந்த அளவீட்டுப் பணிகளைத் தடுத்து நிறுத்துவதற்காக மக்கள் பிரதிநிதிகள், காணி உரிமையாளர்கள், சமூக ஆர்வலர்கள், பொதுமக்கள் ஆகியோர் மண்டைதீவு கிழக்கு முத்துமாரியம்மன் ஆலயத்துக்கு அருகில் ஒன்றுகூடி அங்கிருந்து ஓரணியாகச் சென்று வெலிசுமனகடற்படைமுகாம்முன்பாகக் கூடி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்

கடற்படையினர் ஆக்கிரமித்துள்ள நிலம் சிறந்த விவசாயக் காணிகள், அவையே எமது வாழ்வாதாரமாக இருந்தன. கடற்படையினர் அவற்றை ஆக்கிரமித்துள்ளதால் வாழ்வாதாரத்திற்கும் எமது பிள்ளைகளின் எதிர்காலத்திற்கும் பெரும் சிரமப்படும் நிலையில் உள்ளோம். எனவே எமது காணிகளை எமக்குத் திரும்பித் தரவேண்டும் என்று காணிகளின் உரிமையாளர்கள் வலியுறுத்தினர்.

இந்த எதிர்ப்புப் போராட்டத்தையடுத்த அளவீட்டுப் பணிகள் கைவிடப்பட்டன. (02)

## மண்டைதீவிலுள்ள....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மண் டைதீவு கிழக்கு கிராம சேவகர் பிரிவிற்குட்பட்ட 29 குடும்பங்களுக்குச் சொந்தமான 18 ஏக்கர் காணிகளைச் சுவீகரித்துஅமைக்கப்பட்டுள்ள வெலுசுமண கடற்படை முகாமுக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று நடத்தப்பட்ட போராட்டத்தின் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய போது சிறிதரன் இதனைத் தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் மேலும் தெரிவித்ததாவது:

மண்டைதீவு கிழக்கிலுள்ள இப் பிரதேசமானது சிறந்த மண் வளத்துடன் நீர் வளத்தையும்உடையசெழிப்பான விவசாய நிலமாகும். இந்த நிலத்தை 1990 முதல் ஆக்கிரமித்துள்ளபடையினர் இன்றுவரைஅகலாதுள்ளனர்.

வேலணை, மண்கும்பான், அல்லைப்பிட்டி, மண்டைதீவைச்சேர்ந்த 60க்கும் மேற்பட்டஇளைஞர்கள்சுட்டுக் கொல்லப்பட்டுகத்தோலிக்கத் தேவாலயத்திற்கு முன்னாலுள்ள கிணற்றினுள் புதைக்கப்பட்டனர். இன்றும் அவர்களின்எலும்புக்கூடுகள்அதற்குள் காணப்படுகின்றன.

அந்தக்கிணற்றைஆய்வு செய்யும்படி. வாய்மொழி மூலமாகவும் எழுத்து மூலமாகவும்நாடாளுமன்றத்தில் கோரியபோதும் இதுவரை எதுவுமே நடைபெறவில்லை.

கடற்படை இவ்விடத்தைவிட்டு செல்லுமிடத்து இவ்விடம் ஆய்வுக்குட்படுத்தப்படின் இனப்படுகொல சாட்சியங்கள் இங்கே வெளியாகும் என்பதால் கடற்படைதொடர்ந்தும்ஆக்கிரமித்துள்ளனர். இதற்கு ஆளும் தரப்பும்தொடர்ந்துஆதரவளிக்கின்றது.

இவ் விடயங்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபை மற்றும் சர்வதேச நாடுகள் கூடுதல் கவனமெடுத்து இங்குள்ள புதைகுழிகளைத் தோண்டவேண்டும் என்பதுடன் தற்போது 18 ஏக்கரென நில அளவைத்திணைக்களம் குறிப்பிட்டாலும் இங்கே 40ற்கும்மேற்பட்டஏக்கர்நிலம் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. ஆகவே காலங்காலமாக மக்கள் வாழ்ந்து வந்த இந்த பூர்வீக நிலங்களை மீளவும் உரியவர்களிடமே ஒப்படைக்க வேண்டும் -

## கடற்படையினர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முற்றாக வெளியேற்றப்பட வேண்டும். இந்த மக்களுடைய காணிகள் மீள ஒப்படைக்கப்பட வேண்டும்.

தீவகப் பகுதியை படையினர் ஆக்கிரமித்த போது குறிப்பாககோட்டபாயபொறுப்பிலிருந்த காலப்பகுதியில் நூற்றுக்கணக்கான பெண்கள் பாலியல் வல்லுறவுக்குட் படுத்தப்பட்டும் மிகக் கொடூரமாக சித்திரவதை செய்யப்பட்டும் ஆங்காங்கே புதைக்கப்பட்டுள்ளனர். இதற்கு உயிருடன் இருப்பவர்கள் இன்றும் சாட்சியாக உள்ளனர்.

படையினர் இங்கிருந்து வெளியேறுகின்ற போதே புதைகுழிகளைத் தோண்டி உடலங்களைஎடுத்துகாணாமல்போனவர்களுக்குஎன்ன நடந்ததுஎன்பதைவிசாரணை செய்ய முடியும்.

இங்கு அனைத்துக் காணிகளும்விடுவிக்கப்பட்டு மீள் குடியேற்றம் இடம் பெற்று விட்டது என்று ஆட்சியாளர்கள் உலகத்திற்குச் சொல்லிக்கொண்டு மறுபுறத்திலே காணி அபகரிப்பு நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் மேற்கொள்கின்றனர்.

இலங்கை ஆட்சியாளர்களிடமிருந்து நீதி கிடைக்குமென நம்பிக்கை துளியளவேனும் இல்லாமல் கடந்த 14 ஆண்டுகளாக மக்கள் நீதியை வலியுறுத்தி வருகின்றனர். தேசிய பாதுகா பாபிற்குரிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தலைவரான பச்சை இன வாதி, சரத் வீரசேகராவின் கருத்து உள்நாட்டுக்குள் ஒருபொழுதும்நீதிகிடைக்காது என்பதை புலப்படுத்துகின்றது.

இன்று தமிழ் மக்கள் பிரதிநிதிகள் பலர் ஆட்சியாளர்களோடுபேச்சுவார்த்தையில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் போது இங்கு வந்து போராட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்றால் ஆட்சியாளர்கள் தமிழர்களுடைய கருத்துக்களை கணக்கெடுக்கவில்லை என்பதே அர்த்தமாகும். தமிழர்களோடு பேசி சர்வதேசத்தை ஏமாற்றி உதவிகளைப் பெற்று தென்னிலங்கையைக் கட்டியெழுப்பும்நடவடிக்கை மட்டுமே மேற்கொள்ளப் படுகின்றது.

ஆகவே, வட கிழக்கிலே தமிழர் விவகாரத்திலே நீதித்துறை சுயாதீனமற்றதென மீள மீள நிரூபித்த வண்ணமுள்ளது. இந்த போராட்டங்களூடாகவே உரிமைகளை வென்றெடுக்க முடிவதுடன் இம்மண்ணிலே இருப்பைத் தக்க வைத்துக் கொள்ள முடியும். என்பதை மக்கள் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தார்.

## வழக்குத் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மன்றத்தில் பெரும்பான்மை ஆதரவுடனும் மட்டுமல்லாது மக்கள் அபிப்பிராய வாககெடுப்புக்கும் உட்படுத்தியே நிறைவேற்றும்படி உத்தரவிட வேண்டும்என்றுபவ்ரல் அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாரச்சி தான் தாக்கல் செய்துள்ள மனுவில் தெரிவித்துள்ளார்.

இந்த சட்டமூலத்தின் 155ஆம் உறுப்புரைக்கு அமைய தற்போது கலைக்கப்பட்டிருக்கும் உள்ளூராட்சி மன்றங்களுக்குபுதியதேர்தல் ஒன்றை நடத்தாமல் அதன் மக்கள் பிரதிநிதிகளை மீள அழைக்கும் அதிகாரம் விடயத்துக்கு பொறுப்பான அமைச்சருக்கு வழங்கப்பட்டிருப்பதாக குறித்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடி காரணமாக புதிய தேர்தல் ஒன்றை நடத்துவது அதிக செலவை ஏற்படுத்தக்கூடிய நடவடிக்கையாகும் என இதற்கு காரணமாக குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இதன்காரணமாக தனது அடிப்படை உரிமை மீறப்படுவதாகவும் சர்வஜன வாக்குரிமை மீறப்படுவதாகவும் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இந்த சட்ட மூலம்விசேடபெரும்பான்மை உறுப்பினர்களின்ஆதரவுடன் அல்லது மக்கள் அபிப்பிராய வாக்கெடுப்பின் மூலம் அனுமதித்துக்கொள்ள உத்தரவிடுமாறு மனுதாரர் கேட்டுக்கொண்டுள்ளார்.

## ஜூலை 21....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மசிங்க ஜனாதிபதியா கப் பதவியேற்று சரியாக ஒரு வருட நிறைவிலேயே இந்தச் சந்திப்பு இந்தியாவின் தலைநகர் புதுடில்லியில் இடம்பெறவுள்ளது.

இலங்கை ஜனாதிபதி ஒருவர் புதிதாகப் பதவியேற்றால் அவர் மேற்கொள்ளும் முதல் உத்தியோகபூர்வ வெளிநாட்டுப் பயணம் இந்தியாவுக்கு என்பதே சம்பிரதாயமாக இருந்து வந்த நிலையில், ரணில் ஜனாதிபதியாகி ஒரு வருடமாகியும் அது நடக்கவில்லை. இந்தியப் பிரதமரைச் சந்திக்க ஒரு வருடமாககடும்முயற்சிகளை மேற்கொண்டுவந்தார்ரணில். அந்த முயற்சி இப்போதுதான் சாத்தியமாகியுள்ளது. (02)

## 3 நாடுகளின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜப்பான் ஆகிய மூன்று நாடுகளும் ஒத்துழைப்புக்களை வழங்கிவருகின்றன.

தென்னாபிரிக்காவின் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை முன்மாதிரியாகக் கொண்டு இலங்கையில் உருவாக்கப்பட்டுவரும் தேசிய ஐக்கிய மற்றும்நல்லிணக்கஆணைக்குழுவுக்கு அவசியமான ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்களை தென்னாபிரிக்காவும், ஆணைக்குழு தொடர்பான சட்டமூலத்தை தயாரிப்பதற்கான ஒத்துழைப்பைச் சுவிற்ஸர்லாந்தும், இதற்குரிய நிதி உதவியை ஜப்பானும் வழங்குகின்றன என்று ஆளும் தரப்புச் செய்திகள் கூறுகின்றன.

இந்த நிலையிலேயே இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் மிஸுகொஷி ஹிடேகி, இலங்கைக்கான சுவிற்ஸர்லாந்து தூதுவர் டொமினிக் ஃபக்ளெர் மற்றும் இலங்கைக்கான தென்னாபிரிக்க உயர் ஆணையர்சன்டைல்ஸ்வின் ஸ்கால்க் ஆகியோருக்கும் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரிக்கும் இடையில் நேற்று பேச்சு இடம்பெற்றது.

இச்சந்திப்பின்போது இலங்கையில் சமாதானத்தை கட்டியெழுப்புவதை முன்னிறுத்தி இவ்வனைத்து தரப்புக்களும் மிக நெருக்கமாகப் பணியாற்றுவதற்கான வழிமுறைகள் குறித்து ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த இலக்கை அடைந்துகொள்வதில் ஏனைய நாடுகள் இலங்கைக்கு வழங்கக்கூடிய உதவிகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

## இந்தியா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

8 கிலோ தங்கத்தை கடற்படையினர் கண்டெடுத்தனர். தங்க பிஸ்கட்டுக்கள் மற்றும் சங்கிலிகளாக இவை தனித்தனியே 4 பொதிகளில் மறைக்கப்பட்டிருந்தன.

## கிலோ ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விலை கிடைக்காததால் தமது உற்பத்திகளைச் சந்தைப்படுத்த முடியாத நிலையில் தாம் சிரமப்படுவதாக நெற்செய்கையாளர்கள் தெரிவித்தனர். அதற்கு உரிய உடனடித் தீர்வைப் பெற்றுத்தருமாறும் அவர்கள் அமைச்சரிடம் வலியுறுத்தினர்.

நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரனும் விவசாயிளுக்கு ஆதரவாக இந்தக் கோரிக்கை வலியுறுத்தினார்.

இதையடுத்து ஒரு கிலோ நெல்லுக்கான விலை 95 ரூபாய் எனவும் ஒரு விவசாயிடமிருந்து அதிகபட்சமாக 5000 கிலோ நெல் நாளை முதல் நெல் சந்தைப்படுத்தல் சபையின் ஊடாக கொள்வனவு செய்யப்படும் என்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அறிவித்தார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு
தொலைபேசி இலக்கம்
076 443 80 22



# பலாலியில் மாணவியை துன்புறுத்தியவர் கைது



யாழ்.பலாலி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் 17 வயதான பாடசாலை மாணவியை பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் ஒருவர் செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

பாடசாலை அதிபர் வழங்கிய முறைப்பாட்டுக்கு அமைய 31 வயதான சந்தேகநபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்ட நபரிடம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (05)

# புற்றுநோயாளர்களுக்கான மருந்துகளை பெற கொடையாளர்களிடம் உதவி கோரப்படுகிறது

புற்றுநோயாளர்களுக்கான தேவையான மருந்துகள் மற்றும் வைத்திய உபகரணங்களை பெற்றுக்கொள்வதற்கு நன்கொடையாளர்களின் உதவிகளை எதிர்பார்த்துள்ளதாக மஹரகம அபேக்ஷா புற்றுநோய் வைத்தியசாலையின்பணிப்பாளர்அருண ஜயசேகர தெரிவித்துள்ளார்.

குறித்த நன்கொடைகளை பெற்றுக்கொள்வதற்கான முறையான நடைமுறைகள் தற்போது வைத்தியசாலையின் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளதாகவும் இது தொடர்பில் வைத்தியசாலையின் நிர்வாகத்தைதொடர்புகொண்டு தகவல்களைபெற்றுக்கொள்ள முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடடவை வருமாறு -

அபேக்ஷா வைத்தியசாலையின் புற்றுநோயாளர்களே சிகிச்சை பெற்று வருகின்றனர். அது அனைவருக்கும் தெரியும். நன்கொடையாளர்கள் தேவையான மருந்துகள் மற்றும் உபகரணங்களையும் அன்பளிப்பாக வழங்கி வருகின்றனர். வைத்தியசாலைகளுக்கு நன்கொடை வழங்க முடியுமானால் நாட்டிலுள்ளவர்களும் அல்லது வெளிநாடுகளிலும் உள்ள நன்கொடையாளர்களிடம் நன்கொடைகளைப் பெற்றுத் தருமாறு கேட்டுக்கொள்கிறோம்.

மருந்துகளுக்காக விசேட மருந்து நன்கொடை பிரிவு காணப்படுகிறது. அதேபோன்று ஏனைய நன்கொடைகளுக்கும் பிரிவுகள் காணப்படுகின்றன. இந்நிலையில் நன்கொடையாளர்களிடம் நன்கொடைகளைப் பெற்றுக்கொள்வதற்கான ஒழுங்குகள் வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வைத்தியசாலையின் நிர்வாகத்தை தொடர்புகொண்டு நன்கொடைகளை வழங்க முடியும். - என்றார். (05)

# வவுனியாவில் காட்டு யானைக்கு வெடி வீசியவர் விரல்கள் இழப்பு

வவுனியா கள்ளிக்குளம் பகுதியில் மக்களின் பயன் தரும் நிலங்களிலுள்ள தென்னை, வாழை மரங்களை யானை துவம்சம் செய்து சேதப்படுத்தியுள்ளது.

இதனைத் தடுப்பதற்கு யானைக்கு வெடி வீசிய குடும்பத்தலைவர் ஒருவர் காயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

ஞாயிற்றுக்கிழமை வவுனியா கள்ளிக்குளம் - சிதம்பரம் கிராமத்திற்குள் புகுந்தகாட்டுயானைக்கூட்டம் தென்னை வாழை போன்ற பயிர் நிலங்களை சேதப்படுத்தியுள்ளது. இதனை தடுப்பதற்கு யானைக்கு வெடி வீசிய குடும்பத்தலைவர் கையில் வெடி வெடித்து இரண்டு விரல்கள் அகற்றப்பட்டு வைத்தியசாலையில்சிகிச்சை பெற்று வருகின்றார்.

தமதுகுடியிருப்புமற்றும் பயிர் நிலங்களில் காட்டு யானையின் அச்சுறுத்தல் நாளுக்கு நாள் அதிகரிக்கின்றது.

அதனைத்தடுத்துநிறுத்த அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண் டும் என்று அப்பகுதி மக்கள் கேட்டு நிற்கின்றனர். (05)

# கால்நடை வளர்ப்பு, பால் உற்பத்தி; இந்தியாவுடன் ஒத்துழைப்பு ஒப்பந்தம்

இந்தியமற்றும்இலங்கை அரசாங்கங்களுக்கிடையிலான கால்நடைவளர்ப்புமற்றும் பால் உற்பத்தித் துறையில் ஒத்துழைப்புக்கான ஒருங்கிணைந்த அக்கறை வெளிப்பாட்டு ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இலங்கையில் பால் உற்பத்திகளின்தரப்பண்பை அதிகரித்தல், பால் உற்பத்தியில் தன்னிறைவடைதல் மற்றும் சிறியளவிலான பால் உற்பத்தியாளர்களின் வருமானத்தை அதிகரித்தல் போன்ற இலக்குகளை அடைவதற்கு இணைந்து செயலாற்றுவதற்காக இந்திய அரசுக்கும், இலங்கை அரசுக்கும் இடையில் கால்நடை வளர்ப்பு மற்றும் பால் உற்பத்தித் துறையில் ஒத்துழைப்புக்கான ஒருங்கிணைந்த அக்கறை வெளிப்பாட்டு ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.

அதற்காக வரைவாக்கம் செய்யப்பட்டுள்ள ஒருங்கிணைந்த அக்கறை வெளிப்பாட்டு ஒப்பந்தத்திற்கு சட்டமா அதிபரின் ஒப்புதல் கிடைக்கப்பெற்றுள்ளது.

அதற்கமைய, குறித்த அக்கறை வெளிப்பாட்டு ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்காக ஜனாதிபதி மற்றும் விவசாய அமைச்சர் இணைந்து சமர்ப்பித்த யோசனைக்குஅமைச்சரவை அங்கீகாரம்வழங்கியுள்ளது. (05)

# வடமாகாண முஸ்லிம் பாடசாலைகளை கவனிக்க தனியான முஸ்லிம் கல்வி அதிகாரி அவசியமாகும்

## கல்வி நிர்வாக சேவை அதிகாரிகள் சங்க செயலாளர் கோரிக்கை



வடமாகாண முஸ்லிம் பாடசாலைகளின் விவகாரங்களை கையாள முஸ்லிம் கல்வி பணிப்பாளர் ஒருவர் வடமாகாண கல்வித் திணைக்களத்தில் அவசியம் நியமனம் செய்யப்பட வேண்டும் என ஜனாதிபதி, பிரதமர், கல்வியமைச்சரை கல்விநிர்வாகசேவை அதிகாரிகள் சங்க செயலாளர் ஏ.எல்.எம். முக்தார் கேட்டுக் கொண்டுள்ளார்.

அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும்தெரிவிக்கப்பட்டுள்ளவைவருமாறு-

வடமாகாணத்தில் மன்னார், வவுனியா, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களில் மக்கள் குடியமர்த்தப்பட்ட பின்னர் முஸ்லிம் பாடசாலைகளும் இயங்க ஆரம்பித்துள்ளன. இந்நிலையில் அங்கு முஸ்லிம் பாடசாலைகளில் அதிபர், ஆசிரியர் பற்றாக்குறை மற்றும் வளப்பற்றாக்குறை என்பன நிலவுகின்றன. இஸ்லாம் கற்பிக்க ஆசிரியர்கள் நியமனம் செய்யப்பட வில்லை. அண்மையில்வடமாகாணத்தில்இருந்து 10 இஸ்லாம் பாட கல்விக் கல்லூரி டிப்ளோமாதாரிகள் ஆசிரியர்களாக வெளியேறிய போதும் ஒருவர் கூட வடமாகாணத்துக்கு நியமனம்செய்யப்படாத வகையில் அப்பாடத்துக்கு வெற்றிடமில்லையென வடக்கு மாகாண கல்வியதிகாரிகளால் மத்திய கல்வி அமைச்சிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலைமைகளை சீர் செய்ய வடமாகாண கல்வித் திணைக்களத்திலும், வடமாகாண கல்வி அமைச்சிலும் ஒவ்வொரு முஸ்லிம் கல்வி அதிகாரி நியமனம் செய்யப்பட வேண்டும். இது குறித்து வட மாகாணத்தை சேர்ந்த முஸ்லிம் அரசியல்வாதிகளான அகில இலங்கைமக்கள்காங்கிரஸ்தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன், இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் ஆகியோர் கவனம் செலுத்த வேண்டியது மிக அவசியமாகும் என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (05)

# மரக்கறிகளின் விலை எகிறல்; 75 வீத சிறிய கடைகள் மூடல்



நாட்டில் மரக் கறிகளின் விலை உயர்வு காரணமாக 75 வீதமான சிறியளவிலான சில்லறை மரக்கறி விற்பனை கடைகள் மூடப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்தமாதங்களில் பெரும்பாலான மரக்கறிகளின் விலை 100 சத வீதத்தால் அதிகரித்ததால் மரக்கறிகளின் தேவை குறைந்ததாக மொத்த வியாபாரிகள் கூறினர்.

மேலும் மரக்கறிகளின் விலை உயர்வால் பல நுகர்வோர் 100 - 250 கிராம் வரை மரக்கறிகளை வாங்குவதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

அத்துடன் காய்கறிகள் விற்பனை செய்யப்படாததால் பழுதடையும் மரக்கறிகளைதினமும்அகற்ற வேண்டியிருப்பதாகவும் சில்லறை மரக்கறி வியாபாரிகளை அதிகமானோர் கடைகளைமூடியுள்ளதாகவும் மொத்த வியாபாரிகள் தெரிவித்தனர்.

இதேவேளை, சில்லறை மரக்கறி வியாபாரம் தடைப்பட்டுள்ளதால் பொருளாதார நிலையங்களுக்கு வரும் மொத்தவியாபாரிகளின் எண்ணிக்கையும் வெகுவாக குறைந்துள்ளதாகபொருளாதார நிலையங்களின் அதிகாரிகள் கூறுகின்றனர்.

மிகவும் வறண்ட காலநிலை, பலத்த மழை மற்றும் சில பகுதிகளில் காற்றுடன் கூடிய நிலை காரணமாக மரக்கறி அறுவடைகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# நிர்வாக சேவை அதிகாரிகளுக்கு நீதி கிட்ட அவர்களின் சங்கம் முன்வந்து உதவட்டும்

## கிழக்கின் கேடயம் அமைப்பு கோரிக்கை




தான் சார்ந்த துறை சார்ந்தவர்கள் அநீதியை சந்திக்கும் போது தொழிற்சங்கங்கள் முன் வந்து குரல்கொடுப்பது போன்றல்லாது இலங்கை நிர்வாக சேவை அதிகாரிகள் வஞ்சிக்கப்பட்டு, அநீதிக்கு ஆளாகும்போது இலங்கை நிர்வாக சேவை அதிகாரிகள் சங்கம் தொடர்ந்தும் மௌனம் சாதிப்பது கவலை அளிப்பதாகவும் நிர்வாக பயங்கரவாதத்தால் பாதிக்கப்பட்டுவரும்கிழக்குமாகாண சிரேஷ்ட நிர்வாக சேவை அதிகாரிகளுக்கு நீதியை பெற்றுக்கொடுக்க இலங்கை நிர்வாக சேவை அதிகாரிகள் சங்கம் முன்வரவேண்டும் எனவும் கிழக்கின் கேடயம் கேட்டுக்கொண்டுள்ளது.

கிழக்கின் கேடயம் அமைப்பின் பிரதான ஒருங்கிணைப்பாளர் எஸ்.எம். சபீஸ் கையெழுத்திட்டு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

கல்வி சார்ந்த ஆசிரியர்கள், அதிபர்கள் பாதிக்கப்படும் போது ஆசிரியர் சங்கங்களும், அதிபர் சங்கங்களும் போர்க்கொடி தூக்குவது போன்று, நாட்டில் உள்ள ஏனைய ஆயிரக்கணக்கான அதிகாரிகள் மற்றும் தொழிலாளர்கள் பாதிக்கப்படும்போது அவர்கள் சார்ந்ததொழிற்சங்கங்கள்அல்லது அமைப்புக்கள் முன்வந்து அவர்களுக்கு ஆதரவாகக் குரல்எழுப்பிஅவர்களுக்குநீதியைபெற்றுகொடுக்கின்றனர். ஆனால் நாட்டின் முக்கிய நிர்வாகத்துறை சார்ந்த இலங்கை நிர்வாக சேவை அதிகாரிகள் சங்கங்கள் கிழக்கு மாகாணசபை உட்பட ஏனைய மாகாண சபைகளிலும் சரி, தேசிய ரீதியாகவும் சரி முஸ்லிம் இலங்கை நிர்வாக சேவை அதிகாரிகள் பாரபட்சமாக நடத்தப்படுவதையும், அவர்களுக்கு உரிய இடங்கள் வழங்கப்படாமையையும், சகல தகைமையும் கொண்ட சிரேஷ்ட அதிகாரிகள் இருக்கத்தக்கதாக கனிஷ்ட அதிகாரிகள் முக்கிய உயர்ந்த பதவிகளில் அமர்த்தப்படுவதையும் கண்டும் காணாததுபோலமௌனமாக இருப்பது கவலையளிக்கிறது.

கிழக்கு மாகாண சபையிலும், தேசிய ரீதியாகவும் முஸ்லிம் சிவில் நிர்வாக சேவை அதிகாரிகள் கடுமையான மன உளைச்சலுடன் பணியாற்ற நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். இவர்களுக்கு இலங்கை நிர்வாக சேவை அதிகாரிகள் சங்கம் முன்வந்து நீதியை பெற்றுக்கொடுக்க வேண்டும் என்றுகேட்டுக்கொண்டுள்ளது. (05)

# பிக்குகள் மீது திட்டமிட்ட சேறு பூசல்கள் புலம்பெயர்ந்தோர் ஆதரவில் நடக்கிறது

## பகியங்கல ஆனந்த சாகர தேரர் வருத்தம்



பௌத்தமதகுருமாரிடமிருந்து 100 வீத ஒழுக்கத்தை எதிர்பார்க்க முடியாது என குறிப்பிட்டுள்ள பகியங்கல ஆனந்த சாகர தேரர் பௌத்த மதகுருமாரின் கண்ணியத்துக்கு பாதிப்பை ஏற்படுத்த திட்டமிட்ட முயற்சிகள் இடம்பெறுகின்றன. புலம்பெயர் சமூகம் இதற்கு நிதி வழங்குகின்றது எனக் குறிப்பிட்டு;ள்ளார்.

சர்வதேச உள்நாட்டு சூழ்நிலைகள் வீழ்ச்சியடைந்துகொண்டிருக்கின்ற நிலையில் பௌத்தமதகுருமாரும் பலவீனமான நிலையில் உள்ளனர்.

அவர்கள் குற்றச்செயல்களுக்கு பலியாகலாம்.

தற்போதைய பொருளாதார சமூக சூழ்நிலைகளில் பௌத்தமதகுருமார் ஒருவரிடமிருந்து 100 வீத ஒழுக்கத்தை எதிர்பார்ப்பது சரியான மனோநிலையில்லை.

ஆகவே, இந்த நாட்டின் பௌத்தமதகுருமாரும் மக்களும் சரியான பாதையை பின்பற்ற வேண்டும் என நாங்கள் வலியுறுத்துகின்றோம்.

பௌத்தமதகுருமார் என்ற அடிப்படையில் நாங்கள் வீடியோக்களில் காணப்படும் சம்பவங்களை ஏற்றுக்கொள்வதில்லை.

அதேவேளை, தற்போதைய சமூக நிலைமையின் கீழ் பௌத்தமதகுருமாரிடமிருந்து 100 வீதஒழுக்கத்தை எதிர்பார்க்க முடியாது.

சமீபத்தைய சம்பவங்கள் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டவை. அவை நன்குதிட்டமிடப்பட்டவை. சிவில் சமூகத்தின் மத்தியில் பௌத்தமதகுருமாரின் கௌரவத்தை அதிகாரத்தை குறைப்பதற்காக இவை முன்னெடுக்கப்படுகின்றன.

அரசசார்பற்ற அமைப்புகள் இதனை முன்னெடுக்கின்ற பெருமளவு பணம் புலம்பெயர்ந்தோர் மத்தியிலிருந்து இதற்குக் கிடைக்கின்றது.

கடந்தசிலதினங்களாகநாங்கள் தகவல்தொழில்நுட்ப துறையினர் மற்றும்கற்றவர்களுடன்இதுகுறித்து ஆராய்ந்தோம், இதன் மூலம் இந்த நடவடிக்கைகள் திட்டமிட்டு முன்னெடுக்கப்படுகின்றனஎன்பது தெரியவந்துள்ளது.

அரசாங்கம் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பது குறித்து நாங்கள் வெட்கமடைந்துள்ளோம் என அவர் தெரிவித்துள்ளார். (05)

# மருதானையில் பொலிஸாருடன் வாக்குவாதமாம்: பிரபல பெண்கள் பாடசாலை மாணவிகள் கைது

பொலிஸாரின்உத்தரவை மீறிச் சென்ற பாடசாலை மாணவிகள் பயணித்த டிஃபென்டர் ரக ஜீப் வண்டி ஒன்றை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

குறித்த வாகனத்தில் கொழும்பிலுள்ள பிரபல பெண்கள் உயர்தரப் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவிகள் குழுவினர் காணப்பட்டனர் எனப்பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

மருதானை டெக்னிக்கல் சந்திக்குஅருகில், வாகனத்தை நிறுத்துமாறு பொலி ஸார் சைகை செய்த போதிலும், அந்த உத்தரவை மீறி வாகனம் செலுத்தப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து பொலிஸார் வாகனத்தை துரத்திச் சென்று தடுத்து நிறுத்தினர், இதன்போது மாணவிகளுக்கும் பொலிஸாருக்குமிடையில் வாக்குவாதம் ஏற்பட்டதால் பொலிஸார் மாணவிகளைக் கைது செய்தனர். கைது செய்யப்பட்டவர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்த உள்ளதாக பொலிஸார்தெரிவிக்கின்றனர். (05)

# 4 மாதங்களில் 4 ஆயிரத்து 340 கோடி ரூபா பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் இலாபம்

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்இந்தவருடத்தின் முதல் நான்கு மாதங்களில் 4 ஆயிரத்து 340 கோடி ரூபா இலாபத்தை ஈட்டியுள்ளதாக நிதிநிலை அறிக்கை தெரிவித்துள்ளது.

மசகு எண்ணெய் இறக்குமதிக்காக 277.1 மில்லியன் டொலர்களும் கனிம வள இறக்குமதிக்காக 43.4பில்லியன் ரூபாவும் செலவிடப்பட்டுள்ளதாக நிதி அமைச்சால் இந்த வருட நடுப்பகுதியில் வெளியிடப்பட்ட நிதி நிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இந்த ஆண்டு ஜனவரி மற்றும் ஏப்ரல் மாதங்களுக்கு இடையில், எரிபொருள் இறக்குமதிக்காக இலங்கைக்கு 1,599.7 மில்லியன் டொலர்கள் செலவாகியுள்ளது என்றும், இது மொத்த இறக்குமதி செலவில் 30 சதவீதமாகும் என்றும் அந்த அறிக்கை மேலும் தெரிவித்துள்ளது. (05)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com


## வலுக்கும் எதிர்ப்பு

தென்னாபிரிக்கப் பாணியிலான உண்மை அறியும் ஆணைக்குழு ஒன்றை தேசிய ஐக்கிய மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு என்ற பெயரில் உருவாக்கிவரும் ஆளும் தரப்பின் முயற்சிகளை எதிர்த்துள்ளன வடக்கு கிழக்கில் உள்ள 15 பொது அமைப்புகள். இந்த ஆணைக்குழுவிற்குத் தொடக்கம் முதலே தமிழ் மக்களின் பிரதிநிதிகள் மற்றும் காணாமாலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் என்று பல தரப்பட்டவர்களும் எதிர்ப்பது தெரிவித்து வருகின்றனர். ஆனாலும், அவற்றையெல்லாம் பொருட்படுத்தாமல் இந்த ஆணைக்குழுவை நிறுவுவதில் ஆளும் தரப்புப் பிடிவாதமாக இருக்கின்றது. இத்தகைய பின்னணியிலேயே 15 சிவில் அமைப்புகளும் இப்போது அதற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளன.

இலங்கையில் ஏற்கனவே உருவாக்கப்பட்ட எந்த உள்நாட்டு ஆணைக்குழு அல்லது தீர்ப்பாயம் மீதும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நம்பிக்கையில்லை.

இத்தகைய ஆணைக்குழுக்கள் காலத்தை இழுத்தடிக்கும் நோக்கத்துடன் உருவாக்கப் படுகின்றனவே தவிர, உண்மையைக் கண்டறியும் நோக்கத்துடன் இல்லை.

இத்தகைய ஆணைக்குழுக்கள் ஏற்கனவே வழங்கியஅறிக்கைகளில்கூறப்பட்டுள்ளபரிந்துரைகள் நிறைவேற்றப்பட்டதேயில்லை.

இராணுவத்தினருக்கும் தேசப்பற்றுள்ள சக்திகளுக்கும் ஆட்சியாளர்கள் துரோகமிழைக்கமாட்டார்கள்என்றுபலதடவைகள்வாக்குறுதியளித்த பின்னர் இதுபோன்ற ஆணைக்குழுக்களைப் பெயரளவில் அமைப்பதால் பயன் ஏதும் இல்லை.

நீதிப்பொறிமுறையொன்று இல்லாதநிலையிலேயே தேசிய ஐக்கியமற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அமைக்கப்படுகின்றது . அதனால் மற்றைய ஆணைக்குழுக்களில் இருந்து இது எந்த வகையிலும் வேறுபட்டதல்ல.

2015 இல் ஆளும் தரப்பு நான்கு நிலை மாற்றுநீதிக்கால கட்டமைப்புகளை உருவாக்குவதாக வாக்குறுதியளித்தது.இதில் விசேட நீதிபதிகள் அடங்கிய நீதிப்பொறிமுறையும் ஒன்று ஆனால் 8 வருடத்திற்குபின்னர்இன்றுவரைஅதுநடைமுறைக்கு வரவில்லை.

நீதிப்பொறிமுறையை உருவாக்குவதில் ஏற்பட்ட தோல்வி காரணமாக நம்பகதன்மை மிக்க பொறிமுறை உள்நாட்டில் மூலம் நீதியை தேடுவதற்கு பாதிக்கப்பட்டவர்களிற்கு வாய்ப்பு மறுக்கப்பட்டுள்ளது– அவர்கள் உள்நாட்டு பொறிமுறை குறித்து நம்பகதன்மையை இழந்துள்ளனர்.

போன்ற காரணங்களால் புதிய ஆணைக்குழுவை நிராகரிப்பதாக இந்தப் 15 பொது அமைப்புகளும் கூட்டாகத் தெரிவித்துள்ளன. ஆளும் தரப்பின் காதுகளில் இந்தக் குரலாவது கேட்குமா என்று பார்க்கலாம்.

போர்க் காலத்தில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள், போர்க் குற்றங்கள் போன்றவற்றுக்கு நீதி கேட்டு தமிழ் மக்கள் கடந்த 14 ஆண்டுகளாகப் போராடி வரும் நிலையில், இனி இந்த கண்துடைப்பு ஆணைக்குழுக்களை அமைக்க வேண்டாம் என்பதற்காகவும் போராட்டங்களை நடத்துவதற்கு அவர்கள் நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள் என்றே தோன்றுகின்றது.

கொழும்பு ஆட்சியாளர்கள் மீது தமிழ் மக்கள் நம்பிக்கையற்றிருக்கும் நிலையில் ஆளும் தரப்பு பெருமளவு நிதியைச் செலவளித்து இத்தகைய ஆணைக்குழுக்களை அமைப்பது வீண். பன்னாட்டுச் சமூகத்தையும் தொடர்ந்து இதே உத்தியைப் பயன்படுத்தி ஏமாற்றிக்கொண்டிருக்க முடியாது என்பதால் இத்தகைய முயற்சிகளை ஆளும் தரப்பு கைவிடுவதே உசிதமானது.



# கல்விப் புலத்தின் தனித்துவ அடையாளம் யாழ்ப்பாணக் கல்லூரி

சிவகுருநாதன் கேசவன்

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி தனது வெற்றிகரமான கல்விப் பயணத்தின் இருநூறாவது ஆண்டு நிறைவைஇவ்வாண்டுகொண்டாடுகிறது. இலங்கையின் கல்வி வளர்ச்சியில் மிஷனரிமார்களின் பங்கு நிராகரிக்க முடியாதது. இலங்கையினது நவீன கல்வியின் பிதாமகர்களாக மிஷனரி மாரைக் குறிப்பிடுவதில் தயக்கமேதுமில்லை. அவர்கள் இலங்கைக்கு வந்ததன் நோக்கம் எதுவாக இருந்தாலும் எமது தேசத்திற்கு அவர்களாற்றிய கல்வி, மருத்துவப் பணிகளால் காலமெலாம் நினைவுகூரப்பட வேண்டியவர்களாகத் திகழ்கின்றார்கள். அவ்வகையில் அமெரிக்க மிஷனரிமார் இலங்கைக்குக் குறிப்பாக யாழ்ப்பாணத்திற்களித்த ஒப்பற்றபரிசுகளுள்ஒன்றுயாழ்ப்பாணக் கல்லூரியாகும். யாழ்ப்பாணக் கல்லூரியால் செதுக்கப்பெற்றவர்கள் பலர் இன்று உலகெங்கும் தனித்துவமான ஆளுமையுடன்திகழ்கின்றனர். இருநூறு ஆண்டுகால உன்னதப் பயணத்தில் யாழ்ப்பாணக் கல்லூரித் தாய் தந்த அறுவடைகள் ஏராளம் ஏராளம்.


### முகிழ்ப்பும் எழுச்சியும்

யாழ்ப்பாணக்கல்லூரி (Jaffna college) இலங்கையின் வடமாகாணத்தின் வட்டுக்கோட்டைஎன்றகிராமத்தில்அமைந்துள்ள ஆண், பெண் இருபாலாருக்குமான ஒரு தனியார் பாடசாலையாகும். இன்றுவரை, அரசஉதவிகள்எதனையும் பெறாது ஆசிரியர் ஊதியம் உட்பட அனைத்து செலவினங்களையும்தனது பொறுப்பில் கொண்டு இயங்குகின்ற இலங்கையின் சில முழுமையான தனியார் பாடசாலைகளில் ஒன்றாக யாழ்ப்பாணக் கல்லூரி செயற்பட்டு வருகின்றது.

மதப்பரப்புகையைப் பிரதான நோக்கமாகக் கொண்டு இலங்கைக்கு வந்த அமெரிக்க மிஷனரிமார், யாழ்ப்பாணக் குடாநாட்டை மையமாகக்கொண்டு 'அமெரிக்க இலங்கை மிஷனை' நிறுவித் தமது பணிகளை முன்னெடுத்தனர். 'கல்வியே எல்லாவிதமான முன்னேற்றங்களுக்கும் ஒரே வழி' எனத் திடமாக நம்பிய அமெரிக்க மிஷனரிமார் யாழ்ப்பாணத்தில் பல பாடசாலைகளை நிறுவினர். அந்த வகையில் 1823ஆம் ஆண்டு யூலை மாதம் 22ஆம் திகதி 'பற்றிக்கோட்டா மிஷனரி என்னும் பெயரில் கல்வி நிலையமொன்று வட்டுக்கோட்டையில் நிறுவப்பட்டது. வட்டுக்கோட்டை மிஷனரி என்பதே அவ்வாறு அழைக்கப்பட்டிருக்கவேண்டும். அமெரிக்காவிலிருந்து வந்த மிஷனரி ஊழியரான வண. டானியல் பூவர் இச் மிஷனரியின் நிறுவுனராகவும் முதல் அதிபராகவும் விளங்கினார்.

டானியல் பூவர் யாழ்ப்பாணத்தில் ஒரு பல்கலைக்கழகக் கல்லூரி அமைக்கப்படவேண்டுமெனப் பெரிதும் விரும்பினார். முயன்றார். பிரிட்டிஷ் அரசின் எதிர்ப்பு, பொஸ்டன் தலைமையகத்தின் ஆதரவின்மை, பேராசிரியர்கள் பற்றாக்குறை முதலிய பல சவால்களை அவர் எதிர்கொள்ளவேண்டியிருந்தது. எனினும்சோர்ந்துபோகாது மிஷனரியை அவர்நிறுவினார். டானியல்பூவர்துற்றிய கல்வி, தமிழ், சமூகப் பணிகளுக்காக தமிழ்ச்சமூகத்தவர்களால்என்றென்றும் நினைவுகூரப்படவேண்டியவராவார். பற்றிக்கோட்டாமிஷனரியேயாழ்ப்பாணக் கல்லூரிக்கு அத்திபாரமாக அமைந்தது.

பற்றிக்கோட்டா மிஷனரியை நிறுவியதன் நோக்கம் எதிர்பார்த்த அளவிற்கு மதமாற்றத்தில் வெற்றியைத் தராததாலும் செலவுமிக்க முயற்சியாக இருந்தமையாலும்அன்டர்சன் குழுவின் முடிவின்படி அதனை மூடிவிடுவதற்கு பாஸ்டனிலிருந்த அமெரிக்க மிஷனரிமாரின் தலைமையகம் முடிவுசெய்தது.



வண.ஈ.பி. ஹேஸ்ரிங்ஸ் அவர்கள் யாழ்ப்பாணக் கல்லூரியின் முதல் அதிபர்



வண. டானியல் பூவர் பற்றிக்கோட்டா மிஷனரியின் ஸ்தாபகரும் முதல் அதிபரும்

அம்முடிவு டானியல் பூவரைப் பெரிதும் துயரப்படுத்தியது. அவர் 1854இல் இவ்வுலக வாழ்வை நீத்தார். எவ்வாறாயினும் பாஸ்டன் தலைமையகத்தின் முடிவின்படி 1855இல் இப்பள்ளி மூடப்பட்டது.

1856இல் பற்றிக்கோட்டா உயர் பாடசாலையும், 1859இல் பற்றிக்கோட்டா பயிற்சிப் பாடசாலையும் ஆரம்பித்துச் செயற்பட்டன. பற்றிக்கோட்டா மிஷனரி மூடப்பட்டமையானது மிஷனரிமாரையும் சுதேசிகளான கிறிஸ்தவர்களையும் கவலைகொள்ளச் செய்தது. அவ்விருசாராரும்மிஷனரியை மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பான கோரிக்கைகளை முன்வைக்கத் தொடங்கினர். இவ்வாறான பல தரப்பினரதும் கோரிக்கைகளை அடுத்து 1872ஆம் ஆண்டு யூலை 3ஆம் திகதி பற்றிக்கோட்டா மிஷனரி யாழ்ப்பாணக் கல்லூரியாகப் புத்துயிர் பெற்றது.

வண.ஈ.பி.ஹேஸ்ரிங்ஸ் அவர்கள் கல்லூரியின் முதல் அதிபராக விளங்கினார். ஆதாரமாக நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை 1835இல் அமைக்கப்பட்டது. கல்லூரியின் நிர்வாகச் செயற்பாடுகளை நெறிப்படுத்துவதற்காக 1876ஆம் ஆண்டில் பணிப்பாளர் சபை உருவாக்கப்பட்டது. யாழ்ப்பாணக் கல்லூரி தனக்கெனப் பல தனித்துவங்களையும் பாரம்பரியங்களையும் கொண்ட கல்லூரியாக வெற்றிகரமாகத் தனது பயணத்தை ஆரம்பித்தது. ஆரம்பத்தில் விடுதிப் பாடசாலையாக இயங்கினாலும் 1909 முதல் நாளாந்தம் வருகைதரும் மாணவர்களையும் இணைத்துக்கொண்டது.

படிப்படியாக பல்துறைகளிலும் வளர்ச்சிபெற்றுவந்த யாழ்ப்பாணக் கல்லூரிபல்வேறுவழிகளிலும்இலங்கையின் குறிப்பாகத் தமிழர்களின் கல்வி, விளையாட்டு, பண்பாட்டு, சமூக வளர்ச்சிகளில் தடம்பதித்துள்ளமை மறுக்கமுடியாததாகும். மதப்பரப்புகை நோக்கோடு எம்மண்ணில் கால்பதித்த அமெரிக்க மிஷனரிமாரினால் ஸ்தாபிக்கப்பட்ட இக்கல்லூரி மத, இன, சாதிவேறுபாடுகளின்றிஅனைவரையும் தன்சிறகுகளுக்குக் கீழ் அரவணைத்து ஆளாக்கியுள்ளது. இந்து, கிறிஸ்தவ, சிங்கள, முஸ்லிம் மாணவர்கள் சமத்துவத்தோடு ஆதரிக்கப்பட்டுள்ளார்கள். யாழ்ப்பாணத்தின் இறுக்கமான சாதிக் கட்டமைப்பைத்தகர்த்துசமத்துவத்தைக் கட்டியெழுப்புவதிலும் கல்வியை ஜனநாயகப்படுத்துவதிலும் அமெரிக்க மிஷனரிமாரினதும் யாழ்ப்பாணக் கல்லூரி உள்ளிட்ட அவர்களது கல்வி நிறுவனங்களினதும் தளராமுயற்சியும் பங்களிப்பும் விதந்துகூறத்தக்கன.

யாழ்ப்பாணத்தில்பல்கலைக்கழகம் ஒன்றை நிறுவுவது தொடர்பான கோரிக்கைகள் வலுவடைந்தபோது அதற்காக 1974இல் அரசாங்கம் யாழ்ப்பாணக்கல்லூரியையும்சுவீகரிக்க முற்பட்டது. இதனால்எமதுபட்டதாரிப்பிரிவு செயலிழக்கவேண்டியதாயிற்று. பெருமளவு நிதியிழப்பு ஏற்பட்டது. மேலும் பல பின்னடைவுகளை எதிர்நோக்கவேண்டியேற்பட்டது. எவ்வாறாயினும் கல்லூரி நிர்வாகத்தினர், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகளின் விடாமுயற்சியாலும் அமெரிக்காவிலிருந்த கல்லூரியின் நம்பிக்கைப் பொறுப்புச் சபையினரின் உறுதியான செயற்பாடுகளினாலும் கல்லூரி மீட்கப்பட்டது. சுதாகரித்துக்கொண்ட கல்லூரி இவ்வாறான இருண்டகாலத்திலிருந்து தன்னை விடுவித்துக்கொண்டு மீளெழுச்சிகண்டது.

இரண்டாயிரங்களின் முதலிரு தசாப்தங்களும் கல்லூரிக்கு சவால்மிகுந்த காலங்களாக அமைந்தமை துரதிஷ்டவசமானதாகும். அதற்கான காரணங்கள் பலவாயினும் இங்கு விபரித்தல் பொருத்தமற்றதும் சாத்தியமற்றதுமாகும். எவ்வாறாயினும் இன்று கல்லூரி நிர்வாகத்தின் முனைப்பான செயற்பாடுகளாலும் கல்லூரியின் நம்பிக்கைப் பொறுப்புச் சபையினரின்பங்களிப்பினாலும்பழைய மாணவர்களின் ஒத்துழைப்பினாலும் கல்லூரி மீண்டெழத்தொடங்கியுள்ளது. விரைவில் கல்லூரி மீளொளி வீசும் என நம்புவோம்.

### கல்லூரியின் பட்டதாரிப் பிரிவு

யாழ்ப்பாணக்கல்லூரிக்குப்பெருமை தந்தவற்றுள் ஒன்று அதன் பட்டதாரிப் பிரிவாகும். ஆரம்பத்திலேயே வண. டானியல் பூவர் யாழ்ப்பாணத்தில் ஒரு பல்கலைக்கழகக் கல்லூரியை அமைக்கவேண்டும் எனப் பெரிதும் விரும்பியிருந்தார். அதற்கான முயற்சிகளையும் மேற்கொண்டிருந்தார். எனினும் அது முழுமையாகச் சாத்தியமாகவில்லை. இருப்பினும் பூவரின் கனவைநனவாக்கயாழ்ப்பாணக்கல்லூரி காலத்திற்குக் காலம் முயற்சியெடுத்திருக்கின்றது. ஆரம்பத்தில்தனதுகல்விசார் முயற்சிகளை ஆழமாயும் அகலமாயும் பரப்பித் தடம்பதிக்கத் தொடங்கிய யாழ்ப்பாணக் கல்லூரி, கொல்கத்தா பல்கலைக்கழகம்(1891), சென்னைப் பல்கலைக்கழகம்(1907) ஆகியவற்றுடன் இணைப்புகளை ஏற்படுத்திக் கொண்டு உயர் கல்விப்பணியை விரிவுபடுத்தியது. லண்டன் பல்கலைக் கழகத்தின் இடைநிலை வகுப்புகள் 1921ஆம் ஆண்டிலும் இலண்டன் உயர்தரச் சான்றிதழ் பரீட்சைக்கான வகுப்புகள் 1978ஆம் ஆண்டிலும் ஆரம்பமாகின. பட்டக் கல்வியை வழங்கும் நோக்குடன் கல்லூரியின் பட்டதாரிப்பிரிவு 1947இல் ஆரம்பிக்கப்பட்டது.

(9 ஆம் பக்கம் பார்க்க)


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 300/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swohpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர்
Kalaikkathir

# நேர்முகப் பரீட்சைக்கே தோற்றாத அறுவர் சேவையில்; பல முறைகேடுகள் தொடர்பாக அறிக்கையும் கோரல்

## கோப் குழு கடும் அதிருப்தி

தென்னை பயிர்ச்செய்கை சபையின் நேர்முகத்தேர்வுக்குத் தோற்றாத அறுவரை முன்னாள் தலைவரின் விருப்பத்துக்கு அமைய பணியில்சேர்த்துக்கொள்ளப்பட்டமை தொடர்பில் கோப் குழு கடும் அதிருப்தியை வெளிப்படுத்தியது. இவ்விவகாரம்தொடர்பில்இருவாரங்களுக்குள் அறிக்கை சமர்ப்பிக்குமாறு தெங்கு பயிர்ச்செய்கை சபைக்கு பணிப்புரை விடுத்துள்ளதுடன் இவ்விடயம்தொடர்பில் ஜனாதிபதியின் செயலருக்கு அறிவிக்க கோப் குழு தீர்மானித்துள்ளது.

தெங்குஅபிவிருத்திஅதிகாரசபை, தென்னை பயிர்ச்செய்கை சபை மற்றும் தெங்கு ஆராய்ச்சி நிறுவனம் ஆகியவற்றின்நிர்வாக கட்டமைப்பின் முறைகேடுகள் தொடர்பில் கவனம் செலுத்திய கோப் குழு, நிர்வாக கட்டமைப்பு தொடர்பில் இரு வார காலத்துக்குள் முழுமையாக அறிக்கை சமர்ப்பிக்குமாறு உரிய நிறுவனங்களின் பிரதானிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ரஞ்சித் பண்டார தலைமையில் கடந்த வாரம் கூடிய அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவில் (கோப் குழு) தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை, தென்னை பயிர்ச்செய்கை சபை மற்றும் தெங்கு ஆராய்ச்சி நிறுவனங்களின் தலைவர்கள், உயர்மட்ட அதிகாரிகள் அழைக்கப்பட்டிருந்தனர்.

2021.01.21ஆம்திகதி இடம்பெற்ற கோப் குழுவில் இந்த நிறுவனங்கள் தொடர்பில் வழங்கிய அறிவுறுத்தல்களில்ஏற்பட்ட முன்னேற்றங்கள்இதில் ஆராயப்பட்டன. இதில் கீழ்வரும் விடயங்கள் ஆராயப்பட்டன. தெங்கு பயிர்ச்செய்கையில் பரவக்கூடிய நோய்களைக் கட்டுப்படுத்த மூன்று நிறுவனங்களும் இணைந்து பொது வேலைத்திட்டத்தை தயாரித்தல் தொடர்பில் ஆராயப்பட்டன.

தெங்கு பயிர்ச்செய்கையில் பரவக்கூடிய நோய்களைக் கட்டுப்படுத்த மூன்று நிறுவனங்களும் இணைந்து பொது வேலைத்திட்டத்தை தயாரித்தல் .

அவசர நிலைமையாகக் கருதி விசேட குழுவொன்றை அமைத்து தெங்கு பயிர்ச்செய்கையின் போது பரவும் வெள்ளை -ஈ நோய்களை கட்டுப்படுத்தவும் தெங்கில் பரவும் நோய்களைத் தடுப்பதற்கும் மூன்று நிறுவனங்கள் இணைந்து கலந்துரையாடி பொதுவான வேலைத் திட்டமொன்றைத் தயாரிக்க வேண்டியதன் அவசியம்தொடர்பாக ஆராயப்பட்டது. இதுவரை அமைக்கப்பட்ட தேசிய அனர்த்தமுகாமைத்துவசெயற்பாட்டுப் பிரிவுடன் தென்னை அபிவிருத்தி அதிகாரசபை இணைந்து செயற்படாத காரணத்தால் இந்த நடவடிக்கைக்கு அந்நிறுவனத்தையும் ஈடுபடுத்த வேண்டிதன் அவசியம் வலியுறுத்தப்பட்டது.

தென்னந்தோப்புக்கு உரிய நேரத்தில் உரமிடாததால் இது போன்ற நோய்கள் ஏற்படும் அபாயம் உள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர். தென்னை பயிர்ச்செய்கை சபைக்கு சொந்தமான காணிகளில் கடந்த 2016 ஆம் ஆண்டே உரம் இடப்பட்டதும் இங்கு தெரியவந்தது. அரசாங்கத்திற்குச் சொந்தமானதென்னந்தோப்புகளுக்கு உரங்கள் பயன்படுத்தப்படாமை தொடர்பில் குழுவின் அதிருப்தி தெரிவிக்கப்பட்டது.

இந்த மூன்று நிறுவனங்களையும் தொடர்பு கொண்டு இரண்டு வாரங்களுக்குள்எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகளை அறிவிக்குமாறு பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் செயலாளருக்குக் குழுவின் தலைவர் பரிந்துரைத்தார். இது தொடர்பில் தேவையான ஆதாரங்களை வழங்குவது தொடர்பில் நாடாளுமன்றம் திறைசேரி மற்றும் ஜனாதிபதி செயலாளருக்கு அறிவிக்கவுள்ளதாக கோப் குழுவின் தலைவர் சுட்டிக்காட்டினார்.

தேங்காய் ஏலத்தில் காணப்படும் ஏகாதிபத்தியத்தை நிறுத்தி வெளிப்படைத் தன்மையை ஒன்லைன் முறைமையை மீண்டும் ஏற்படுத்த அறிவுறுத்தல்

தேங்காய் ஏலத்தை ஒன்லைன் மூலம் மேற்கொள்வதற்கு கணினி மென்பொருள் தயாரிக்கப்பட்டாலும், அது தற்போது செயல்படாமல் இருப்பது தொடர்பாகக் கவனம் செலுத்தப்பட்டது. இதன் மூலம் வெளிப்படைத்தன்மையுடன் ஏலம் நடத்த முடியும் என்றும். தேங்காய் ஏலத்தில் ஒருசிலரின் ஏகபோகத்தைத் தடுக்கும் நோக்கில் இந்த முறை அறிமுகப்படுத்தப்பட்டது என்றும் தெரியவந்தது.

பலதரகர்களின் ஒத்துழைப்புடன் இந்த ஒன்லைன் முறைமையை நடைமுறைப்படுத்த அதிகாரத்தில் உள்ள அதிகாரிகள் சிலர் தயக்கம் காட்டுகின்றமை தொடர்பாகவும் இங்கு கலந்துரையாடப்பட்டது. எனவே, இந்த ஏலத்தை இன்னும் வெளிப்படைத்தன்மையுடன் நடத்த மூன்று மாதங்களுக்குள் இந்த ஒன்லைன் முறைமையை மீளப் பயன்படுத்துமாறு அறிவுறுத்தப்பட்டது.

உள்நாட்டில் தேங்காய் எண்ணெய் உற்பத்தியை அதிகரிக்க வேண்டும் மற்றும் தரமற்ற தேங்காய் எண்ணெய் இறக்குமதியைக் கட்டுப்படுத்த வேண்டும்

2020-2022 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இலங்கையில் நுகர்வுக்காக 187,623 மெற்றிக் தொன் தேங்காய் எண்ணெய் மற்றும் 225,510 மெற்றிக் தொன் பாம் ஒயில் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது. இதனால் இந்த நாட்டில் தேங்காய் எண்ணெய் பாவனையில் 22 சதவீதம் உள்ளூர் உற்பத்தியிலும் 78 சதவீத இறக்குமதி செய்யப்பட்ட எண்ணெயிலும் ஈடுபடுத்தப்படுவது பெரும் பிரச்சினையாக உள்ளது எனக் கலந்துரையாடப்பட்டது. மேலும் இறக்குமதி செய்யப்படும் தேங்காய் எண்ணெயின் தரத்தில் உள்ள சிக்கல்கள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது.

இதன்படி, தென்னை அபிவிருத்தி அதிகாரசபை நுகர்வோர் அதிகாரசபை, சுகாதார அமைச்சு போன்ற சம்பந்தப்பட்ட நிறுவனங்களை அழைத்து விரிவான விசாரணைகளை மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டது. டிஜிற்றல் விளம்பரப் பலகைகளை அமைப்பதற்குதனியார் நிறுவனத்துக்கு ஒப்பந்தமின்றி மில்லியன் ரூபா முற்பணம் தென்னை அபிவிருத்தி அதிகார சபையின் நாரஹேன்பிட்டி தலைமை அலுவலகத்திற்கு முன்பாக டிஜிற்றல் விளம்பர பலகை அமைப்பதற்காக ஏறத்தாழ 5 மில்லியன் ரூபா செலவிலான ஒப்பந்தம் 2021ஆம் ஆண்டு எவ்வித எழுத்துமூலம் ஒப்பந்தமும் மேற்கொள்ளப்படாமல் தனியார் நிறுவனமொன்றுக்கு வழங்கப்பட்டுள்ளது. இதற்கான முற்பணமாக ஒரு மில்லியன் ரூபா வழங்கப்பட்டதாகவும் சிலருடைய செல்வாக்கின் அடிப்படையில் பணம் வழங்கப்பட்டதாகவும் நிதிப் பணிப்பாளர் தெரிவித்தார். இது தொடர்பில்விரிவானவிசாரணையை மேற்கொண்டு இரண்டு வாரங்களுக்குள் பொறுப்பானவர்களை வெளிப்படுத்துமாறு அமைச்சின் செயலாளருக்கு பணிப்புரை வழங்கப்பட்டது.

### நேர்முகப் பரீட்சைக்கு முறையாகத் தோற்றாத 6 பேர் நியமனம்

தென்னை பயிர்ச்செய்கை சபையின் நேர்முகத்தேர்வுக்குத் தோற்றாத6பேர்முன்னாள்தலைவரின் விருப்பத்துக்கு அமைய பணியில் சேர்த்துக்கொள்ளப்பட்டமையும்இங்கு தெரியவந்தது. இது தொடர்பில் குழு தனதுஅதிருப்தியைவெளிப்பட்டதுடன் இவ்விவகாரம்பற்றிய அறிக்கையை இரண்டு வாரங்களுக்குள் வழங்குமாறும்வலியுறுத்தியது.இதுதொடர்பில் மேலதிக நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதியின் செயலாளருக்கு அறிவிக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

### பல நிர்வாக சிக்கல்கள் மற்றும் முறைகேடுகள் குறித்து கவனம்

தெங்கு அபிவிருத்தி அதிகார சபையால் 2006 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டகன்னாவதென்னை நார் அபிவிருத்தி மற்றும் பயிற்சி நிலையத்தின் செயற்பாடுகள் 2020 ஆம் ஆண்டு முதல் நிறுத்தப்பட்டுள்ளமை தொடர்பில் குழு கேள்வி எழுப்பியுள்ளது. லட்சக் கணக்கான ரூபா மதிப்பிலான இயந்திரங்கள்சேதமடையும்அபாயம் உள்ளதால் இது தொடர்பாக ஒரு மாதத்துக்குள் அறிக்கை அளிக்க குழுவின் தலைவர் பணிப்புரை விடுத்தார்.

இது தவிர, தென்னை பயிர்ச்செய்கைசபையின்பிரதானகட்டடத்தில் முன் அனுமதியின்றி ஒரு பகுதியை வழங்கியமையால் 21 மில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டமை நீர்கொழும்புவிதைதென்னை அலகிற்கு கட்டடம் ஒன்றை அமைப்பதற்காக ஆலோசனை நிறுவனமொன்றுக்கு ஏறத்தாழ 2 மில்லியன் ரூபா கொடுப்பனவு வழங்கப்பட்டமை உள்ளிட்ட பிரச்சினைகள் குறித்து முறையானஅறிக்கைஅளிக்குமாறும் அறிவுறுத்தப்பட்டது. தெங்குஆராய்ச்சிநிறுவனத்தின் அலுவலர்கள் ஆய்வு தொடங்கும் முன் நிறுவனத்துடன் தற்போதுள்ள சட்டப் பிணைப்பை அதிகரிக்கவும், லட்சக்கணக்கில் செலவழித்து ஆராய்ச்சியைத் தொடங்கியபின்அதனைமீளப்பெறும் நிறுவனத்துக்கு ஏற்பட்ட பெரிய நஷ்டத்தால் ஏற்படும் இழப்பை மீளப்பெறவும் குழு வலியுறுத்தியது . (05)



# சாய்ந்தமருது அல் - ஜலால் வித்தியாலயம் தரமுயர்வு

கல்முனைகல்விவலயசாய்ந்தமருதுகமுகமுஅல்-ஜலால் வித்தியாலயம் கிழக்கு மாகாணக் கல்விச் செயலாளர் எச்.ஈ.எம்.டபிள்யு. ஜி.திஸாநாயக்க அவர்களின் 2023.07.04 ஆம் திகதிய கடிதத்தின் பிரகாரம் 2023.04.24 ஆம் திகதி தொடக்கம் க.பொ.த உயர்தர கலைப்பிரிவு கொண்ட 1சி பாடசாலையாகத் தரமுயர்த்தப்பட்டுள்ளது.

கல்முனை வலயக் கல்விப்பணிப்பாளர் எம்.எஸ்.எஸ். நஜீம்தலைமையிலானவலய மட்டகுழுவின்பரிந்துரைகளை அடுத்து கிழக்கு மாகாணக் கல்விப்பணிப்பாளர் அகிலா கனகசூரியம் தலைமையிலான குழுவினர் வழங்கிய சிபாரிசின் அடிப்படையில் உயர்தரம் ஆரம்பிப்பதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது. சுனாமியால் முழுமையாக பாதிக்கப்பட்ட இப்பாடசாலை சர்வதேச தொண்டு நிறுவனங்களின் உதவியுடன் மீளுருவாக்கம் செய்யப்பட்டு இலங்கை கல்வியமைச்சின் முழுமையான ஒத்துழைப்புடன் சிறப்பாக இயங்கி வருகிறது.

பாடசாலை அதிபர் எம்.ஐ.எம்.சைபுதீன் தலைமையிலான பாடசாலை பிரதி அதிபர், ஆசிரியர்கள் பழைய மாணவர் சங்கத்தினர் மற்றும் பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக் குழு உறுப்பினர்கள், பாடசாலை நலன்விரும்பிகள் ஆகியோரின் அயராத முயற்சியின் பயனாக பாடசாலை இந்த அடைவை எட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# அமைச்சர் நஸீர் அஹமட் பயணித்த ஹெலிகொப்டருக்கு என்ன நடந்தது?

## பாதுகாப்புத் தரப்பினர் விளக்கம்

சுற்றாடல்துறை அமைச்சர் நஸீர் அஹமட் பயணித்த ஹெலிகொப்டர் கடும் மழை காரணமாக கொத்மலை காமினி திசாநாயக்க தேசிய பாடசாலை மைதானத்தில் செவ்வாய்க்கிழமை காலை திடீரென தரையிறக்கப்பட்டது.

பலத்த மழை காரணமாக கொத்மலை சுற்றுவட்டாரப் பகுதியில் தரையிறங்கியதாகவும் அமைச்சரும் விமானியும் சுமார் 45 நிமிடங்கள் மைதானத்தில் தங்கியிருந்தனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

மழையுடனான காலநிலை தணிந்ததையடுத்து, நுவரெலியாவிலிருந்து பல உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பிரதிநிதிகளையும் ஏற்றிக்கொண்டு ஹெலிகொப்டர் மட்டக்களப்புக்கு புறப்பட்டுச் சென்றதாக பாதுகாப்புத் தரப்பினர் தெரிவித்தனர். (05)

# வெல்லம்பிட்டியைச் சேர்ந்த இரு வர்த்தகர்கள் தங்க நகைகளுடன் விமான நிலையத்தில் கைது

சட்டவிரோதமான முறையில் தங்க நகைகளை நாட்டுக்குள் கடத்திய இரு வர்த்தகர்களை விமான நிலையத்தில் வைத்து பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு திணைக்கள அதிகாரிகள் குழுவினர் கைது செய்துள்ளனர்.

2 கோடியே 80 லட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகளைஇவ்வாறுகடத்திக் கொண்டுவரும் போதே இரு வர்த்தகர்களும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அவர்களின் பயணப் பொதிகளில் இருந்து ஒரு கிலோ780கிராம்எடையுள்ள தங்க நகைகளை பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினர் மீட்டுள்ளனர்.

கொழும்புவெல்லம்பிட்டி பிரதேசத்தில் வசிக்கும் 44 வயதுடைய இரு வர்த்தகர்களும் அடிக்கடி விமானங்களில் வெளிநாடுகளில் இருந்து பொருள்களை எடுத்து வந்து விற்பனை செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருபவர்கள் என விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

இவர்கள் இருவரும் இந்தியன் எயார்லைன்ஸ் விமானத்தில் இந்தியாவின் சென்னையில் இருந்து கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த நிலையிலேயே கைதுசெய்யப்பட்டனர்.

கைதுசெய்யப்பட்ட இருவரும் சட்டவிரோதமாக கொண்டு வந்த நகைகளுடன் மேலதிக விசாரணைகளுக்காக கட்டுநாயக்கவிமானநிலைய சுங்க அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (05)

# தலாய் லாமாவின்பிறந்த தினத்தில் களனிப் பல்கலையில் கருத்தரங்கு



திபெத்திய ஆன்மிக தலைவர் தலாய் லாமாவின் 88 ஆவது ஜனன தினத்தை அர்த்தமுள்ள வகையில் கொண்டாடும் வகையில் இலங்கையில் உள்ள பல்கலைக்கழகம் ஒன்றில் கருத்தரங்கம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அமைதிக்கானநோபல்பரிசு பெற்ற தலாய் லாமா தனது 88 ஆவது ஜனன தினம் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றிருந்தது. இதற்கான நிகழ்வு களனி பல்கலைக்கழகத்தில் இடம்பெற்றிருந்தது. திபெத்திய மக்களின் ஆன்மீக மற்றும் மதத் தலைவர் மற்றும் உலகம் முழுவதும் போற்றப்படுகிறார் என்று இந்த நிகழ்வை சுட்டிக்காட்டி பத்திரிகைகள் செய்திகளை வெளியிட்டிருந்தன. தலாய் லாமா பௌத்த கோட்பாட்டின் அடிப்படையில் 100 இற்கும் மேற்பட்ட புத்தகங்களை எழுதியுள்ளார். பல தலைப்புகளின் அடிப்படையில் எண்ணற்ற போதனைகளைவழங்கியுள்ளார். புத்தரின் போதனைகளிலிருந்து எழுந்த பெரும் கருணையின் அடிப்படையில் மற்றும் அஹிம்சையின் மாறாத கொள்கையைப் பின்பற்றி, தலாய் லாமா அவரது தனித்துவமான அமைதித் திறனுக்காக 1989 இல் அமைதிக்கான நோபல் பரிசு பெற்றார்.

உலகம் முழுவதிலுமிருந்து வரும் மில்லியன் கணக்கான தலாய் லாமாவின் அபிமானிகள் மற்றும் பக்தர்கள் அவரது 88 ஆவது பிறந்தநாளை பல்வேறு நாடுகளில் கொண்டாடினர். களனிப் பல்கலைக்கழகத்தின் மனிதவள பீடம், சமூக விஞ்ஞான பீடம், பாலி மற்றும் பௌத்த கற்கைகள், தத்துவவியல் திணைக்களம், சமஸ்கிருதம் மற்றும் கிழக்கு கற்கைகள் திணைக்களம், பௌத்த சகோதரத்துவத்துக்கான அறக்கட்டளை மற்றும் சர்வதேச பௌத்த சம்மேளனம்இணைந்துஒருசர்வதேசஅறிவு சார்கருத்தரங்கைஏற்பாடுசெய்தமை குறிப்பிடத்தக்கது. (05)

# பிரசவத்தை விரைவுபடுத்த மருந்து அருந்திய பெண் சாவு

## மின்னேரிய பொலிஸ் பிரிவில் சம்பவம்



பிரசவம் தாமதமானதால் அதனை விரைவுபடுத்து-வதற்காகஉள்ளூரில் தயாரிக்கப்பட்ட மருந்தை உட்கொண்ட பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார் என மின்னேரிய பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சிகிரியாபிரதேசத்தில் வசிக்கும் 23 வயதுடைய சதுனிகா விஜேரத்ன என்ற திருமணமான பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்தபெண்ணுக்கு மூன்று வருடங்களுக்கு முன்பு திருமணமாகி, இதுவரை குழந்தை இல்லாத காரணத்தால், தனது உறவினர் நடத்தும் ஆலயம் ஒன்றுக்குச் சென்று மூன்று நாள்கள் உள்ளூர் மருந்தை உட்கொண்டுள்ளார்.

பின்னர், இவர் உடல் நலக்குறைவு காரணமாக திங்கட்கிழமை ஜெயந்திபுர வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில், அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டார் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (05)

# அறிக்கைகள் தேவையேயில்லை வேலையே முக்கியம் – பிரசன்ன



இந்த நாட்டின் கரையோரத்தில் உள்ள கவர்ச்சிகரமான இடங்களைக் கண்டறிந்து உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளைக் கவரும் வகையில் அவசர வேலைத் திட்டத்தைத் தயாரிக்குமாறு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க கடலோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வள முகாமைத்துவ திணைக்களத்துக்கு ஆலோசனை வழங்கினார்.

இவ்வாறானஇடங்களை அபிவிருத்தி செய்வதற்கு நகர அபிவிருத்தி அதிகார சபை மற்றும் தனியார் துறை உட்பட ஏனைய அரச நிறுவனங்களைத் தொடர்புகொண்டு பொருத்தமான முதலீட்டாளர்களைக் கண்டறிய வேண்டும் எனவும் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க மேலும் சுட்டிக் காட்டினார்.

பத்தரமுல்லை, செத்சிரிபாயவில் அமைந்துள்ள அமைச்சின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

கடலோரப்பாதுகாப்புமற்றும்சமுத்திர வள முகாமைத்துவத் திணைக்களம் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் கீழ் செயற்படும் ஒரு நிறுவனம் ஆகும். இந்த நிறுவனம் ஏற்கனவே நாட்டின் கடற்கரையோரத்தில் 24 புதிய சுற்றுலாத் தலங்களை அடையாளம் கண்டுள்ளது.

ஆற்றங்கரை, புத்தளம் களப்பு தீவுகள், குடவ, வைக்காலை, நீர்கொழும்பு களப்பு, கபுன்கொட, ப்ரீத்திபுர, கொக்கல களப்பு, சீதகால்ல, நகவ களப்பு, லுனம களப்பு, மலால லேவாய, கிரிந்த, குனுகலே கடற்கரை, எலிபெண்ட் ரொக், சலதீவ் தீவு, தம்பலகமுவ பே, கவர்னர் ஒப்பிஸ், உப்புவெளி, சம்பல்தீவு கடற்கரை, ஆர்யமல்ல கடற்கரை, நாயாறு கடற்கரை, நந்திக்கடல் கடற்கரை, சாந்தகுளம் கடற்கரை ஆகியவை சுற்றுலாத் தலங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

இந்த நாட்டின் கரையோரத்தில் இவ்வாறான பல இடங்கள் மேலும் கண்டறியப்பட வேண்டுமென அமைச்சர்மேலும்வலியுறுத்தினார்.

நாட்டின் கரையோர சுற்றாடலைப் பாதுகாத்து நாட்டைச்சூழவுள்ளஅனைத்து கடற் பிரதேசங்களையும் உரிய முறையில் அபிவிருத்தி செய்வதன் மூலம் எமது நாடு எதிர்நோக்கும் பொருளாதார நெருக்கடிகளுக்குத் தீர்வு காண முடியும் என அமைச்சர்மேலும்சுட்டிக்காட்டினார்.

எனவே, நாட்டின் கடற்கரையோரங்களில் சுற்றுலாத் துறையை மேலும் மேம்படுத்து-வதுடன், கடற்கரையோரங்களில் ஏனைய அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்பதற்கான சாத்தியக்கூறுகளை ஆராயுமாறும் அமைச்சர் அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

பொருளாதார வளங்கள் நிறைந்த இந்நாட்டின் கடற்கரை1620கி.மீ. எனவே, இந்த நாட்டின் கரையோரப் பகுதியைப் பாதுகாத்து, கரையோர வளங்களை அடிப்படையாகக் கொண்ட பாதுகாப்பான மற்றும் நிலையான அபிவிருத்தி தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டும். - என்றார்.

இது தொடர்பாக, அறிக்கைகள் தனக்கு அவசியமில்லை என்றும், பணியை மட்டும் செய்தால் போதும் என்றும், தினமும் கலந்துரையாடல்கள் நடத்தி அறிக்கைகளை முன்வைக்காமல், ஒரு வேலையையாவது செய்து காட்ட வேண்டும் என்றும் அமைச்சர் வலியுறுத்தினார். (05)

காலைக்கதிர் Kalaikkathir

## தேர்தல் நடத்தப் பணம் இல்லாத நாட்டில்

# குடிசன மதிப்பீடு இப்போது எதற்கு? ரணிலின் வெற்றியை மதிப்பிடவா?

### சுரேஷ் பிரேமச்சந்திரன் கேள்வி



தேர்தல் நடத்தப் பணம் இல்லாத இலங்கை, பெருமளவு பணத்தைச் செலவிட்டு குடிசனமதிப்பீட்டைச்செய்வது புள்ளிவிவரத்துக்காக மட்டுமா அல்லது அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ரணிலின் வெற்றி வாய்ப்பை மதிப்பிடுவதற்காகவா?

இவ்வா கேள்வி எழுப்பியுள்ளார் ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன்.

நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் செய்தியாளர்களிடம் பேசும்போது அவர் இதனைத் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையில் முழு குடிசன மதிப்பீடு செய்வதற்காக வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது. நாடு முழுவதும் அந்த மதிப்பீட்டை செய்வதற்கு பல்லாயிரக்கணக்கான உத்தியோகத்தர்கள் தேவை.

குடிசன மதிப்பீடு என்பது ஆள் எண்ணிக்கையை மட்டும் கணக்கிடுவதன்று. பல்வேறு விடயங்களையும் உள்ளடக்கியே அது அமையும்.

எதிர்கால திட்டமிடல்கள், அபிவிருத்தி போன்றன இந்த குடிசன மதிப்பீட்டின் அடிப்படையிலே மேற்கொள்ளப்படும்.

உள்நாட்டு கடன் மற்றும் வெளிநாட்டு கடன்களைச் செலுத்த முடியாது என்று அறிவித்துள்ள ஒரு நாட்டில் குடிசனமதிப்பீட்டைசெய்வதற்கான பெருந்தொகை பணம் உள்ளதா என்ற கேள்வி எழுகின்றது.

இந்த வருடத் தொடக்கத்தில் உள்ளூராட்சித் தேர்தலை நடத்த வேண்டியிருந்த சூழலில், பல கட்சிகளும், சுயேச்சைக் குழுக்களும் பல கோடி ரூபாவை வைப்பாகக் கொடுத்து அதனை நடத்துமாறு கேட்டிருந்தது.

ஆயினும் நாடு பொருளாதார ரீதியாக வங்குரோத்து நிலையில் உள்ளதாககூறி இந்த தேர்தல் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

தற்பொழுது நாடாளுமன்றத்தில் திருத்தச் சட்டம் கொண்டுவந்து பழைய உள்ளூராட்சிமன்றங்களை மீண்டும், இயங்க வைப்பதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றன. ஏனென்றால் தேர்தலை நடத்தப் பணம் இல்லை என்பதுதான் காரணம்.

இப்படியிருக்கையில் பெருமளவான பணத்தைச் செலவு செய்து குடிசன மதிப்பீட்டைச் செய்யகூடிய நிலையில் இலங்கை இருக்கின்றதா? இந்தத் தேர்தலை ஒத்தி வைக்கும் ஜனாதிபதி, வரும் வருடம் முதலாவதாக ஜனாதிபதித் தேர்தலைவைப்பதற்கு அவர் விரும்புகின்றார்.

ஜனாதிபதியை பொறுத்தமட்டில் அவர் மீளவும் மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதியாக வர வேண்டும். அதற்காகவே அவர் உழைக்கின்றார்.

உள்ளூராட்சி தேர்தல் மட்டுமன்றி, மாகாணசபை தேர்தலும் 5 வருடமாக நடத்தப்படவில்லை. எல்லாவற்றுக்கும் பணம் இல்லை என்பதுதான் காரணமாகச் சொல்லப்படுகின்றது. இவ்வாறாக ஜனநாயக விரோத செயற்பாடுகளில் ஈடுபடும் ரணில். இந்தக் குடிசனமதிப்பீட்டைச்செய்வது அதற்காக மட்டுமா, ஜனாதிபதித் தேர்தலில் தான் வெல்வதற்கான சாத்தியப்பாட்டை அறிவதற்கா என்கிற சந்தேகம் எழுகின்றது.

குடிசன மதிப்பீடு உலக நாடுகளில் நடப்பது இயல்பு. ஆனால் பொருளாதாரத்தில் தலையெடுக்க முடியாத இலங்கை போன்ற நாட்டிற்கு இது தேவையானதா? - என்றார்.



# ஆட்சியில் இருந்த சகலருமே நிதி நெருக்கடிக்குப் பொறுப்பு

### எஸ்.எம்.சந்திரசேன கூறுகிறார்

நிதி வங்குரோத்து நிலை தொடர்பில் ஆராய வேண்டுமாயின் சுதந்திரத்துக்கு பின்னரான காலத்தில் ஆட்சியில் இருந்த சகல அரசாங்கங்களின் செயற்பாட்டையும் ஆராய வேண்டும்.

ஆகவே, வங்குரோத்து நிலைக்கு ஆட்சியில் இருந்த அனைவரும் பொறுப்புக் கூற வேண்டும் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.சந்திரசேன தெரிவித்தார்.

பத்தரமுல்லை பகுதியில் உள்ள பொது ஜன பெரமுனவின் காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நிதி வங்குரோத்து நிலை தொடர்பில் ஆராய்வதற்கு பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தலைமையில் நியமிக்கப்பட்டுள்ள தெரிவுக்குழுவுக்கு எதிர்க்கட்சிகள் எதிர்ப்பு தெரிவிக்கிறார்கள். பொருளாதாரப் பாதிப்புக்கு பொதுஜன பெரமுன பொறுப்புக்கூற வேண்டும் என்று தவறான நிலைப்பாட்டை எதிர்க்கட்சிகள் தோற்றுவிக்கின்றன.

நிதி வங்குரோத்து நிலை தொடர்பில் ஆராய வேண்டுமாயின் 1948 ஆம் ஆண்டுக்கு பின்னர் ஆட்சியில் இருந்த சகல அரசாங்கங்களின் செயற்பாடுக்களையும் ஆராய வேண்டும். 1971 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த சிறிமாவோ பண்டாரநாயக்க தேசிய விவசாயம் மற்றும் தேசிய தொழிற்றுறை ஆகியவற்றை மேம்படுத்துவதற்காக மூடிய பொருளாதாரக்கொள்கையை அறிமுகப்படுத்தினார்.

இறக்குமதிகள் தடைசெய்யப்பட்டதால் தேசிய உற்பத்திகள் குறுகிய காலத்தில் அபிவிருத்தியடைந்தன. இருப்பினும் அந்தக் காலப் பகுதியில் மக்கள் பாதிக்கப்பட்டார்கள். இந்த பாதிப்பை முன்னிலைப்படுத்தி 1977 ஆம் ஆண்டு ஜே.ஆர்.ஜயவர்தன ஆட்சிக்கு வந்தார். ஆட்சிக்கு வந்தவுடன் மூடிய பொருளாதார கொள்கைத் திட்டத்தை இரத்து செய்து திறந்த பொருளாதாரக்கொள்கையை அறிமுகப்படுத்தினார். இதனால் பொருளாதாரம் பாதிக்கப்பட்டது.

1988 மற்றும் 1989 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் மக்கள் விடுதலை முன்னணியின் கலவரத்தால் நாடு பாரிய நெருக்கடியை எதிர்கொண்டது. இதனை தொடர்ந்து 30 வருடகால யுத்தம் ஆகிய காரணிகளால் நாடு பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஆட்சியில் நாடு வங்குரோத்து நிலை அடைந்தது என்று குறிப்பிடுவதை ஏற்றுக் கொள்ள முடியாது. பொதுஜன பெரமுனவின் கொள்கையை அவர் முறையாக செயற்படுத்த வில்லை. கொள்கைக்கு அப்பாற்பட்ட வகையில் செயற்பட்டார்.

இறுதியில் பாரிய நெருக்கடி ஏற்பட்டு அது ஆட்சி மாற்றத்துக்கு வழி வகுத்தது. - என்றார். (05)

# சனத்தொகைக் கணக்கெடுப்பு நடத்த வர்த்தமானி வெளியீடு

சனத்தொகை கணக்கெடுப்பை நடத்துமாறு உத்தரவிட்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

சனத்தொகை கணக்கெடுப்பு சட்டத்தின் கீழ் ஜனாதிபதிக்கு உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

அதற்கமைய 2023-2024 ஆம் ஆண்டுகளில் சனத்தொகை மற்றும் வீட்டுக்கணக்கெடுப்பை நடத்துமாறு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார்.

இதற்கு முன்னர் கடந்த 2012 ஆம் ஆண்டு சனத்தொகை கணக்கெடுப்பு நடத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# தங்க ஜெல் சிக்கியது 5 வர்த்தகர்கள் கைது

### 16 கோடியே 40 லட்சம் ரூபா பெறுமதியானது



தங்க ஜெல் மற்றும் பவுடரை இந்தியாவின் சென்னைக்கு எடுத்துச் செல்ல தயாரான ஐந்துவர்த்தகர்களை விமானநிலையத்தில்வைத்து சுங்க போதைப்பொருள் கட்டுப்பாட்டு பிரிவின் அதிகாரிகள் நேற்று முன்தினம் பிற்பகல் கைதுசெய்துள்ளனர்.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட தங்க ஜெல் மற்றும் பவுடரின் பெறுமதி சுமார் 16 கோடியே 40 லட்சம் ரூபாவென அதிகாரிகள் தெரிவித்தனர்.

நீர்கொழும்பு பகுதியைச் சேர்ந்த 30 வயதுடைய வர்த்தகர்கள் நால்வரும் 55 வயதுடைய வர்த்தகருமே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

குறித்த 5 வர்த்தகர்களும் செவ்வாய் பிற்பகல் 1.55 மணிக்கு கட்டுநாயக்கவில் இருந்து இந்தியாவின் சென்னைக்கு புறப்படும் விமானத்தில் பயணத்தை மேற்கொள்ளவே விமான நிலையத்திற்கு சென்றுள்ளனர். குறித்த நபர்களின் நடவடிக்கையில் சந்தேகம் கொண்ட அதிகாரிகள் அவர்களது பயணப் பொதியை சோதனையிட்ட போது மறைத்து வைக்கப்பட்டிருந்த 08 கிலோ 650 கிராம் எடையுள்ள 23 தங்க ஜெல் குளிகைகள் மற்றும் 10 பொதிகளில் தங்கப் பவுடர் ஆகியவற்றை மீட்டனர்.

கைப்பற்றப்பட்ட தங்க ஜெல் குளிகைகள் மற்றும் தங்க பவுடர் பொதிகளை மேலதிக விசாரணைகளுக்காக அனுப்பி வைத்துள்ளதாக சுங்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (05)

# அதா உல்லாவும் அவர் குடும்பமும் தொடர்ந்து காணி பிடிக்கின்றனர்

### ஜும்மா பெரியபள்ளிவாசல் பிரதம நம்பிக்கையாளர் குற்றசாட்டு

படித்த, பண்பான மக்கள் உள்ள சபைகளில் தரக்குறைவான மற்றும் இழிசொற்களை தவிர்த்துக்கொள்ளுமாறு தேசிய காங்கிரஸ் தலைவர் ஏ.எல்.எம். அதாஉல்லாவிடம் ஊரின் பொறுப்புவாய்ந்த தலைமைத்துவமாக எடுத்து கூறினேன்.

அப்போது இப்பிராந்தியத்தில் உள்ள காணிகள் மற்றும் நிலங்களில் மண் போட்டவர்கள் அதனை அகற்றவேண்டும் என்று அவர் கூறினார். அவரது இல்லிடமான கிழக்கு வாசல் கூட 06 அடிக்கு மேல் மண்போட்டு நிரப்பிய இடமென்பதை அவருக்கு நினைவுபடுத்தினேன். அவர் அதிகாரத்திலிருந்த போது அவரது ஆதரவாளர்கள் நிறையபேருக்கு காணிகள் கடந்த காலங்களில் பிடித்து கொடுக்கப்பட்டுள்ளது. மற்றவர்களை நோக்கி விரல் நீட்ட முன்னர் உங்கள் குடும்பத்தினரை நோக்கி விரல் நீட்டுங்கள் என்று தேசிய காங்கிரஸ் தலைவர் ஏ.எல்.எம். அதா உல்லா விடம் கூறியுள்ளேன் என தேசிய காங்கிரஸின் தேசிய இணைப்பாளராக இருந்த அக்கரைப்பற்று பிரதேச சபையின் தேசிய காங்கிரஸ் சார்பிலான முன்னாள் பிரதிதவிசாளரும், அக்கரைப்பற்று மாநகரசபை முன்னாள் உறுப்பினருமான அக்கரைப்பற்று ஜும்மா பெரியபள்ளிவாசல் பிரதம நம்பிக்கையாளர் எஸ்.எம். சபீஸ் தெரிவித்தார்.

அக்கரைப்பற்று பிரதேச செயலகத்தில் நடைபெற்ற அக்கரைப்பற்று பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தை தொடர்ந்து ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்ட அவர் மேலும் தெரிவிக்கையில் -

காணிகள் முறையாக நிரப்பப்பட்டு முறையான வடிகாலமைப்புடன் மக்கள் பாவனைக்கு வழங்கப்படவேண்டும் என்பது தொடர்பில் நானும் தேசிய காங்கிரஸ் தலைவர் ஏ.எல்.எம். அதா உல்லாவும் பல தடவைகள் கலந்துரையாடியுள்ளோம்.

இங்கிருக்கும் குளங்களை மண்போட்டு நிரப்பியது அவரும் நாங்களும் இணைந்து தான். கூகுள் படத்தை வைத்து காணிகளை தீர்மானிக்க முடியாது என்பதை அவருக்கு விளக்கினேன். குளங்களை நிரப்பும் போது சரி கண்ட அவர் இப்போது தலைகீழாக மாறி நிற்கிறார்.

அக்கரைப்பற்றில் களப்பு எங்கிருக்கிறது? அக்கரைப்பற்று பொதுமைதான காணிகள் யார் வசமிருக்கிறது? பிரதேச செயலகத்தின் பின்னால் உள்ள காணிகளை பிடித்து வைத்திருப்பவர் யார் ? எல்லாமே அதா உல்லாவின் குடும்பத்தினரிடமே உள்ளது. எல்லாவற்றையும் நடத்திவிட்டு ஒன்றும் நடக்காதது போல இருப்பதில் தேசிய காங்கிரஸ் தலைவர் ஏ.எல்.எம். அதா உல்லா முதல்தரமானவர்.

அவற்றுக்கு மேலாக அக்கரைப்பற்று தேசிய பாடசாலை அபிவிருத்தி குழு கூட்டத்தையும் குழப்புகிறார்கள், பழைய மாணவர் அமைப்பின் கூட்டத்தையும் குழப்புகிறார்கள் இவர்களின் நோக்கம் என்ன? இந்த அமைப்புக்களில் அவர்களும் இணைய விரும்பினால் முறையான அனுமதிகளை பெற்று இணைந்து பாடசாலையை மேம்படுத்தலாம். அப்படியெல்லாமல் குழப்புவதன் மூலம் எதை அடைய முயற்சிக்கிறார்கள். இந்த குழப்பல் திட்டமிடல்களுக்கு பின்னால் தேசிய காங்கிரஸின் முக்கிய செயலாளர் ஒருவர் இருக்கிறார்.

சம்பவம் தொடர்பில் பொலிஸுக்கு வாக்குமூலம் வழங்க சென்ற இரு பெற்றோரை பொலிஸ் கைது செய்துள்ளது.

திங்கள் காலை கைதானவர்களை செவ்வாய் காலைதான் நீதிமன்றுக்கு பொலிஸ் ஆஜர் படுத்தியதென்றால் பின்னணியில் உள்ள அரசியல் சக்தி யார் என்பதை எல்லோரும் அறிவர். வைத்தியர்கள் உங்களுக்கு ஒன்றுமில்லை வீட்டுக்கு செல்லுங்கள் என்று கூறியும் கேளாமல் பொய்க்கு நாடகம் நடித்துக்கொண்டு ஒருவர் வைத்தியசாலையில் இருக்கிறார்.

நீர்வழங்கல் காரியாலய இடமாற்றத்தின் போதும் நாங்கள் மக் களின் பக்கம் நின்று வீதிக்கு இறங்கி போராடினோம், பள்ளிவாசல் காணியை மீளப்பெற வேண்டிய போது அவர்களுக்கு விளங்கும் பாயில் எடுத்துக்கூறி அந்த காணியை மீட்டெடுத்தோம்.

கொரோனா காலத்தில் களத்தில் நின்ற அனைத்துப்பள்ளிவாசல் சம்மேளனத்தை கலைக்க முற்பட்டார். வைத்தியசாலை நிர்வாகத்தை சீரமைத்த போதும் அவர் குறுக்கிட்டார். எனது தொழிலை முடக்க அனைத்து வேலைத்திட்டங்களையும் செய்தார். கற்பினிகளுக்கான சிகிச்சை நிலையத்தைகளஞ்சியமாக்க எத்தனித்தார். இவற்றையெல்லாம் முகங்கொடுத்து பழகியவர்கள் நாங்கள். மக்கள் இவர்களை பற்றி நன்றாக அறிந்துள்ளார்கள்.

இவர்களின் இந்த அச்சுறுத்தல்களுக்கும், பழிவாங்கல்களுக்கும் நாங்கள் முகங்கொடுத்து பழகியமையால் நாங்கள் இந்த பூச்சாண்டிகளுக்கெல்லாம் பயப்பட போவதில்லை. இவர்களின் எந்த சதிகளையும் நேருக்கு நேராக சந்திக்க தயாராக இருக்கிறேன். எங்களுக்கு எதிராக இட்டுக்கட்டப்பட்ட போலியான செய்திகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க உள்ளேன். - என்றார். (05)

# மட்டக்களப்பு வாவியில் முதலைகள் நடமாட்டத்தால் மீன்பிடிப்பு பாதிப்பு

இலங்கையின் இரண்டாவது மிகப்பெரிய வாவியான மட்டக்களப்பு வாவி பெருகிவரும் ஆற்றுவாழைத் தாவரங்களால் அழிவடைந்து வருவதுடன் மீனவர்கள் பெரும் கஷ்டங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் குறித்த வாவியில் மீன்கள் பாடலிசைத்ததால் பாடும்மீன்கள் வாழும் வாவி என குறித்த வாவி சர்வதேச புகழ் பெற்றது.

குறித்த மட்டக்களப்பு வாவியில் சுமார் 15 ஆயிரம் மீனவ குடும்பங்கள் மீன்பிடி தொழிலில் ஈடுபட்டு வருகின்றன. குறித்த ஆற்றுவாழைத் பெருக்கத்தால் மீனவர்கள் தோணிகளைத்தள்ளமுடியாமலும் அவதியுறுவதாகத் தெரிவிக்கின்றனர்.

முதலை மற்றும் பாம்புகளும் அதனுள் மறைந்திருப்பதாக மீனவர்கள் தெரிவிக்கின்றர்.

குறித்த வாவியை அழித்துவரும் ஆற்றுவாழைகளை அகற்றித்தருமாறு மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (05)

# யானைகளின் தாக்குதலில் ஒரே நாளில் மூவர் இறப்பு

வெவ்வேறு இடங்களில் காட்டுயானைகள் தாக்கி யுவதி ஒருவர் உட்பட மூவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர்.

இந்த மூன்று இறப்புகளும் நேற்று முன்தினம் பதிவாகியுள்ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொலன்னறுவை - இலங்காபுரம் பிரதேசத்தில் செவ்வாய்க்கிழமை மாலை காட்டு யானை தாக்கி 27 வயதுடைய யுவதி ஒருவர் சாவடைந்துள்ளார். யுவதி தாயாருடன் வயல் வெளிக்குச் சென்ற போது காட்டு யானை தாக்கி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

அவருடன் ஒன்றாகச் சென்ற தாய், படுகாயங்களுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

மொனராகலை - புத்தல பிரதேசத்தில் செவ்வாய்யிரவு காட்டு யானை தாக்கி 54 வயதுடைய ஆண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளில் பயணித்த குறித்த நபரை வீதியைக் கடந்து சென்ற யானைகளில் ஒன்று தாக்கியதில் அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

அனுராதபுரம் - கஹடகஸ்திகிலிய பிரதேசத்தில் செவ்வாய்க்கிழமை பகல் காட்டு யானை தாக்கி 33 வயதுடைய ஆண் ஒருவர் சாவடைந்துள்ளார்.

குறித்த நபர் மாடு மேய்ப்பதற்காக அப்பகுதியிலுள்ள குளத்துக்குச் சென்ற போது யானை தாக்கியுள்ளது எனவும், அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார் எனவும் பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்துள்ளது. (02)

# வீட்டில் மின்சாரம் தாக்கி பல்கலை மாணவி சாவு!

வீட்டில் மின்சாரம் தாக்கி இளம் யுவதி ஒருவர் சாவடைந்துள்ளார். இந்தச் சம்பவம் கம்பஹா - அத்தனகல்ல பிரதேசத்தில் நேற்று அதிகாலை 5.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

களனிப்பல்கலைக்கழகத்தில்கல்விகற்கும் 24 வயதுடைய எஸ்.ஆர்.ருஷாங்கி என்ற மாணவியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த மாணவி ஆடைகளை அழுத்த மின்னழுத்தியைக் கையாண்டபோதே மின்சாரம் தாக்கி சம்பவ இடத்திலேயே சாவடைந்துள்ளார் என்று பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. (02)

# உருக்குலைந்த ஆணின் சடலம் நேற்று மீட்பு

உருக்குலைந்த நிலையில் ஆணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

கொழும்பு – கோமகம பிரதேசத்தில் நேற்று காலை குறித்த சடலம் மீட்கப்பட்டுள்ளது.

வீதியோரத்தில் அடையாளம் காண முடியாதவாறு உருக்குலைந்த நிலையில் சடலம் காணப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சடலத்தைப் பிரேத பரிசோதனைக்காக வைத்தியகுசாலையில் ஒப்படைத்த பொலிஸார், இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (02)

## கார் மோதி 11 வயது சிறுவன் உயிரிழப்பு

வீதி விபத்தில் 11 வயது சிறுவன் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் புத்தளம், கற்பிட்டி பிரதேசத்தில் செவ்வாய்க்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

குறித்த சிறுவன் தந்தையுடன் வீட்டுக்கு அருகில் உள்ள கடைக்குப் பொருட்களை வாங்கச் சென்றபோதே விபத்தில் சிக்கியுள்ளார்.

இருவரும் வீதியில் நடந்து சென்றபோது பின்னால் வேகமாக வந்த கார் அவர்கள் மீது மோதியுள்ளது. இதன்போது சம்பவ இடத்திலேயே குறித்த சிறுவன் உயிரிழந்துள்ளார். அவரின் தந்தை சிறுகாயங்களுடன் உயிர் தப்பியுள்ளார்.

சம்பவம் தொடர்பில் காரின் சாரதியைக் கைது செய்துள்ள பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (02)


OKAYA ELECTRIC VEHICLES
dsl
We lead the way...!
பெட்ரோல் பைக்குகளை பயன்படுத்துவதை
விட 77% இலாபமான பாவனைக்கு
The inEVitable
Future of Smart Mobility
FAAST-F4
140-160 KM ஒருமுறை*
சார்ஜ் செய்தால்
FAAST-F2T
80-85 KM ஒருமுறை*
சார்ஜ் செய்தால்
FREEDOM
70-75 KM ஒருமுறை*
சார்ஜ் செய்தால்
Rs.550,000/- இருந்து
வண்ணத்தெரிவுகள்:
conditions apply*
இந்தியாவில் வேகமாக வளர்ந்து
வரும் மின்சார வாகனம்
2 வருட உத்தரவாதம்
3 இலவச சேவைகள்
Visit DSL EV Experience Center : # 525, Union Place Colombo 02
Hotline - 070 300 9555

காலைக்கதிர் Kalaikkathir

# வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் நடமாடும் சேவை யாழ்ப்பாணத்திலும்

## ஜூலை 15, 16 இல் என அமைச்சர் மனுஷ தெரிவிப்பு

வடக்கும் தெற்கும் சமமாக நடத்தப்படும் என்ற செய்தியுடன் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் நடமாடும் சேவையான க்லோபல் பெயார் 2023 எதிர்வரும் 15 மற்றும் 16 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் முற்றவெளி விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளதாக தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் -

தெற்கில் ஆரம்பிக்கப்பட்ட க்லோபல் பெயார் 2023 வேலைத்திட்டத்தை யாழ்ப்பாணத்தில் கொண்டு வருவதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளோம்.

சர்வதேசத்தை இலங் கைக்கு கொண்டு செல்ல, இலங்கையை சர்வதேசத் திற்கு கொண்டு செல்ல, இலங்கை தொழிலாளியை உலகிற்கு கொண்டு செல்ல, உலக அறிவை இலங்கைக்கு கொண்டு செல்ல, இந்த க்லோபல் பெயார் நாங்கள் ஆரம்பித்துள்ளோம்.

நாங்கள் தெற்கைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல்வாதிகள். நாங்கள் தென்பகுதி அரசியல்வாதிகள் என்று சிலர் நினைக்கிறார்கள்.

ஆனால் எங்களுக்கு வடக்கு, தெற்கு என்ற வித்தியாசம் இல்லை. நாங்கள் முழு நாடாக வேலை செய்கிறோம். வடக்கிற்கு நடக்கும் அநீதிகள் பற்றி பேசும் இந்த சந்தர்ப்பத்தில், தெற்கில் சோதனை தி ட மாக ஆரம்பிக்கப்பட்ட முதல் வேலைத் திட்டம் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்படுகிறது.

இதன் ஊடாக ஆள் கடத்தலைத் தடுப்பதற்கு, பல்வேறு கடத்தல்களில் சிக்கு பவர்களை அதில் இருந்து தடுக்கவும், பயிற்சி பெறாமல் வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கு அனுப்புவதற்கு பதிலாக பயிற்றப்பட்டவர்களை வெளிநாட்டு வேலைக்கு அனுப்பவும், வெளிநாட்டு தொழிலுக்கு செல்லும்போது தேவையான விழிப்புணர்வு வசதிகளை ஏற்படுத்தவும் இதன்போது நடவடிக்கை எடுக்கப்படும்.

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கு வந்து எமது அமைச்சின் மூலம் நீங்கள் பெறக்கூடிய அனைத்து சேவைகளையும் யாழ்ப்பாணத்தில் பெற்றுக்கொள்ள முடியுமான சேவையை வழங்க நடவடிக்கை எடுக்க இருக் கிறோம். பயிற்சிகள், ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதி தொடர்பான பிரச்சினைகள், வெளிவிவகார அமைச்சு தொடர்பான விடயங்கள், வெளியுறவு அமைச்சின் கன்சியூலர் பிரிவு சேவைகள் என அனைத்தும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ளக்கூடிய சந்த்தர்ப்பம் இதன் மூலம் கிடைக்கப்பெறும்.

இந்த நடமாடும் சேவையில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தொழில் திணைக்களம் எம்முடன் வருவதுடன் பாடசாலை மாணவர்களுக்கு கல்வி உதவி சமூக சேவை வாய்ப்புகளை வழங்குகின்றோம்.

அத்துடன் வெளிவிவகார அமைச்சும் இலங்கை மத்திய வங்கியும் எம்முடன் கைகோர்த்து வருகின்றன.

மேலும் யாழ்பாணத் துக்கு சென்று தமிழ் மொழி பேசும் மக்களுக்கு அந்த மொழியிலேயே தேவையான சேவைகள் பெற்றுக்கொடுக்கப்படும்.

உள்நாட்டு வெளிநாட்டு தொழில் வாய்ப்புக்களை பெற்றுக்கொள்ள சந்தர்ப்பம் வழங்குகிறோம். பயிற்சி பெற்ற இருந்த போதும் சான்றிதழ் இல்லாதவர்களுக்கு பயிற்சி அதிகாரசபை ஊடாக பயிற்சி சான்றிதழ் வழங்குவோம். விசேட தேவையுடையோர் தொடர்பாகவும் தேவையான



சேவைகளை வழங்க இருக்கிறோம். அத்துடன் இந்த நடமாடும் சேவையில் கலந்துகொள்பவர்கள் இணையவழியில் பதிவு செய்துகொள்ளவும் நட வடிக்கை எடுத்திருக்கிறோம். இவர்கள் பதிவு செய்து விட்டு தங்களின் கியூ.ஆர். அட்டையுடன் நடமாடும் சேவை இடம்பெறும் இடத் துக்கு நேரடியாக சென்று இலகுவாக சேவைகளை பெற்றுக்கொள்ளமுடியும். எனவே ஒரே நாடு ஒரே தேசம் ஒரு நாட்டில் இருக்கும் அனைவருக்கும் ஒரேமாதிரி நாங்கள் கவனிக்கிறோம் என்ற செய்தியை க்லோபல் பெயார் ஊடாக நாங்கள் எடுத்துச்செல்வோம். - என்றார்.

(05)

# கல்விப் புலத்தின் தனித்துவ அடையாளம்.....

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணக் கல்லூரிப் பட்ட தாரிப் பிரிவின் முதல் தலைவராக வண.எஸ்.கே ப(ட)ங்கர் பொறுப்பேற்றுச் செயற்பட்டார்கள். படிப்படியாக வளர்ந்து 1970களின் ஆரம்பத்தில் விஞ்ஞான, கலை, வர்த்தகத் துறைகளில் கல்வி பயின்ற சுமார் 450 மாணவர்களுடன் வெற்றிகரமாக அப்பிரிவு இயங்கிக்கொண்டிருந்தது. 1972இல் யாழ்ப்பாணக் கல்லூரி தொழினுட்ப நிறுவனம் நிறுவப்பட்டமையைத் தொடர்ந்து விரிவான மூன்றாம்நிலைக் கல்வியையும் வழங்கும் நிறுவனமாக யாழ்ப்பாணக் கல்லூரி திகழ்ந்தது. துரதிஷ்டவசமாக 1974இல் அரசாங்கம் கல்லூரியைச் சுவீகரித்து, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தை நிறுவமுற்பட்டமையினால் எமது பட்டதாரிப்பிரிவு செயலிழக்கவேண்டியதாயிற்று. எனினும் பட்டதாரிப்பிரிவை மீளத்தொடங்கும் ஆர்வம் இருந்துகொண்டேயிருந்தது.

காலங்கனிய, இலங்கைப் பல்கலைக்கழகங்களினால் வழங்கப்படும் வெளிவாரிப்பட்டங்களுக்கு மாணவர்களைத் தயார்ப்படுத்தும் நோக்கத்தோடு 1993 முதல் வட்டுக்கோட்டையிலும் யாழ்.நகரின் மத்தியிலும் யாழ்ப்பாணக் கல்லூரியின் பட்டதாரிப் பிரிவு மீளச் செயற்படத்தொடங்கியது. யாழ் நகரில் இன்றும் இப்பிரிவு பலருக்கும் பயன்படும் வண்ணமாகச் செயற்பட்டுவருகின்றது. 1975ஆம் ஆண்டில் யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனம் மருதனார்மடத்தில் செயற்படத் தொடங்கியமை குறிப்பிடத்தக்கதாகும். பட்டதாரிப் பிரிவு, தொழினுட்ப நிறுவனம், விவசாய நிறுவனம் என்பன கல்லூரியை மற்றொரு தளத்திற்கு அழைத்துச்சென்றன.

### கல்லூரியின் அதிபர்கள்

யாழ்ப்பாணக் கல்லூரியின் காத்திரமான பயணத்தின் மாலுமிகளாக பல பெரியவர்கள் பணியாற்றியுள்ளார்கள். யாழ்ப்பாணக் கல்லூரியின் தொடக்கமான பற்றிக்கோட்டா செமினரியின் முதல் அதிபராக வண.பிதா டானியல் பூவர் செயற்பட்டார். பின்னர் வண.எச்.ஆர். ஹொய்சிங்ரன், வண.ஈ.பி. ஹேஸ்ரிங்ஸ் ஆகியோர் அதிபர்களாயிருந்தனர். 1872இல் யாழ்ப்பாணக் கல்லூரி ஆரம்பமானபோது வண.ஈ.பி. ஹேஸ்ரிங்ஸ் முதலாவது அதிபரானார். பின்னர் வண.எஸ்.டபிள்யூ. கௌலண்ட், வண.ஆர்.சி. ஹேஸ்ரிங்ஸ், வண.ஜி.ஜி. பி(ட)ரவுண், வண. ஜோன் பி(ட)க்னல், வண.எஸ்.கே. ப(ட)ங்கர் ஆகியோர் சிறப்பாகப் பணியாற்றினர்.

1947இன் பின்னர் சுதேசிகள் யாழ்ப்பாணக் கல்லூரியின் அதிபர்களாக நியமனம்பெற்றார்கள். கே.ஏ. செல்லையா (1947-1965) யாழ்ப்பாணக் கல்லூரியின் முதல் சுதேசிய அதிபரானார். தொடர்ந்து எஸ்.வி.பாலசிங்கம், ஏ.ராஜன் கதிர்காமர், வண.கலாநிதி.எஸ். ஜெபநேசன் ஜீ. இராஜநாயகம் வண. அந்தோனி ஏ. போல், திரு. நோயல் விமலேந்திரன், வண.கலாநிதி.டி.எஸ். சொலமன் ஆகியோர் அதிபர்களாகத் தமது சேவையை வழங்கியுள்ளனர். கல்லூரியின் அதிபராக 2022ஆம் ஆண்டு முதல் செயற்படும் திருமதி றுஷிரா குலசிங்கம் கல்லூரியின் முதலாவது பெண் அதிபர் என்பது குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர்களுள் வண. ஜோன் பி(ட)க்னல் பலராலும் விதந்து குறிப்பிடுகின்றவர். அவர் ஆசிரியராக பத்து வருடங்களும் அதிபராக 21 வருடங்களும் யாழ்ப்பாணக் கல்லூரிக்குப் பணியாற்றியவர். அவர் அதிபராக இருந்த காலத்தைக் கல்லூரியின் பொற்காலமாகக் குறிப்பிடும் பலரும் அக்காலத்தில் கல்லூரி கண்ட பல்துறை முன்னேற்றங்களையும் சுட்டிக்காட்டுகின்றனர். பிக்னல் பற்றிக் குறிப்பிடும் சீலன் கதிர்காமர் 'பாடசாலையை பல வகைகளில் கட்டியெழுப்பியவர்களுள் மிகவும் சக்திவாய்ந்த பிரமாண்டமானவராகத் திகழ்ந்தார், அவர் புதிய கட்டடங்களைக் கட்டுவதிலும் ஆசிரியர்கள் மூலம் பாடம் புகட்டுவதிலும் பாடசாலை நிர்வாகத்திலும் கல்விசாரா விளையாட்டுப் போன்றவற்றை ஊக்குவிப்பதிலும் சிறந்து விளங்கினார்' எனச் சுட்டிக் காட்டுகிறார்.

வண. ஜோன் பி(ட)க்னலுக்கு அடுத்தபடியாக அதிககாலம் (20ஆண்டுகள்) அதிபராகப் பதவிவகித்தவர் என்ற பெருமையைப் பெற்றவர் ஏ. ராஜன் கதிர்காமர். அவரே அதிக காலம் அதிபராகப் பதவிவகித்த சுதேசிய அதிபருமாவார். யாழ்ப்பாணக் கல்லூரி பல சவால்களை எதிர்கொண்ட காலத்தில் தனது ஆளுமையாலும் ஆற்றலாலும் அவற்றை வெற்றிகொண்டு இன்றும் யாழ்ப்பாணக் கல்லூரி என்ற நிறுவனம் தலைநிமிர்ந்துநிற்க வழிவகுத்தவராகவும் இன்றும் பலரதும் மனங்களில் நீங்கா இடம்பிடித்த அதிபராகவும் ராஜன் கதிர்காமர் திகழ்கின்றார் என்றால் அது மிகையல்ல.

### கல்லூரியின் முத்திரைகள்

யாழ்ப்பாணக் கல்லூரி என்றதுமே எம் நினைவுக்கு வரும் அடையாளங்கள் பலவுள்ளன. அவற்றுள் முதன்மையானது கல்லூரியின் நூல் நிலையமாகும். இந்நூல்நிலையம் தெற்காசியாவின் தலைசிறந்த கல்லூரி நூலகமாக ஒருகாலத்தில் விளங்கியதாகும். என்னறிவிற்கெட்டிய வகையில் இன்றும் இலங்கையின் பெரிய பாடசாலை நூலகமாக இது விளங்குகிறது. ஆரம்பத்தில் பற்றிக்கோட்டா மிஷனரியில் சிறிய நூலகம் இருந்ததாகவும் அந்நூலகம் சுமார் 2000 நூல்களுடன் யாழ்ப்பாணக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டபோது கல்லூரியுடன் இணைக்கப்பட்டு, 1876இல் கல்லூரியில் நூலகம் ஸ்தாபிக்கப்பட்டதாகவும் அறியப்படுகிறது. இந்த நூலகம் 25000இற்கும் அதிகமான அரிய நூல்களுடனும் தொன்மையான ஆவணங்களை உள்ளடக்கிய ஆவணக்காப்பகத்துடனும் விளங்கியதாகும்.

1974ஆம் ஆண்டில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தை ஆரம்பிப்பதற்காக அரசினால் கல்லூரியின் ஒருபகுதி கையகப்படுத்தப்பட்டபோது நூலகமும் கையகப்படுத்தப்பட்டுப் பின்னர் நூலகத்தின் அரியபல நூல்களும் ஆவணங்களும் பல்கலைக்கழக நூலகத்திற்காக எடுத்துச் செல்லப்பட்டன. கடுமையான முயற்சியின் பின்னர் அந்த நூல்களின் ஒரு பகுதி மீளப்பெறப்பட்டது. இன்று கல்லூரியின் வாயிலில் தலைநிமிர்ந்து நிற்கும் 'டானியல் பூவர் நூல்நிலைய'க் கட்டடம் 1974ஆம் ஆண்டில் அடிக்கல் நாட்டப்பட்டு 1980இல் திறந்துவைக்கப்பட்டதாகும்.

கல்லூரியன் ஒட்லி மண்டபம் மற்றொரு அடையாளமாகும். 1826ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட மண்டபமே பின்னர் சேர் றிச்சேர்ட் ஒட்லியின் பெயர் சூட்டப்பட்டு ஒட்லி மண்டபமாயிற்று. பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் தமது கலைத்திறமைகளை வெளிப்படுத்தவும் வளர்த்துக்கொள்ளவும் களமமைத்த மண்டபமாக ஒட்லி மண்டபம் இன்றும் உயிர்ப்போடிருக்கிறது. 'குவாட்ராங்கிள்' என அழைக்கப்படும் கல்லூரியின் உள்ளக அரங்கமும் முக்கிய அடையாளமாகும். பங்கர் விடுதி, ஹௌலண்ட் விடுதி என்பனவும் கல்லூரியின் அங்கங்களாகும். 1950களில் பட்டதாரிப்பிரிவு ஆண் மாணவர்களுக்காகவும் 1956இல் பட்டதாரிப்பிரிவு மாணவிகளுக்காகவும் திறந்துவைக்கப்பட்ட விடுதிகளே முறையே பங்கர், ஹௌலண்ட் எனப் புகழ்பெற்றன. இவை தவிர இடைநிலை மாணவர்களுக்காக சான்டர்ஸ், செல்லையா விடுதிகளும் கல்லூரியில் இயங்கின. கல்லூரியின் விளையாட்டு வீரர்களை உருவாக்கிய பிறவுண் மைதானம், பிக்னல் மைதானம் என்பன நினைவைவிட்டகலாதவை. கிழக்கு மைதானம் என அறியப்பட்ட மைதானம் 1939இல் பிக்னல் மைதானம் எனப்பெயரிடப்பட்டது. அம்மைதானத்தில் பெரும் பார்வையாளர் அரங்கு நிர்மாணிக்கப்பட்டு 1960இல் பிக்னல் ஞாபகார்த்த அரங்கமாகத் திறந்துவைக்கப்பட்டது. இதுவே யாழ்ப்பாணப் பாடசாலைகளில் அமைக்கப்பட்டுள்ள மிகப்பெரிய பார்வையாளர் அரங்கமாகும்.

கல்லூரியின் மலர் 1879இர் வெளிவரத் தொடங்கியது. இது ஆங்கில, தமிழ் மொழிகளில் வருடாந்தம் வெளிவரும் கல்லூரியின் உத்தியோக பூர்வ மலராகும். மாணவர்களின் ஆக்கங்களை உள்ளடக்கிய, தவணைக்கொரு இதழாக மலர்கின்ற மலராக தமிழ், ஆங்கில மொழிகளில் அச்சுப்பிரதியாக இளஞாயிறு என்ற சஞ்சிகை கல்லூரியில் வெளிவந்தது. இதன் முதல் இதழ் 1936ஆம் ஆண்டில் வெளிவந்தமை குறிப்பிடத்தக்கதாகும். இவை தவிர கல்லூரித் தமிழ் மன்றத்தினர் தமிழருவி என்ற சஞ்சிகையையும் விடுதிமாணவர்கள் விடுதிச் சுடர் என்ற சஞ்சிகையையும் கையெழுத்துப் பிரதியாகத் தவணைதோறும் வெளியிட்டுவந்தனர். இவை மாணவர்களின் எழுத்தாற்றலையும் ஓவியம் முதலிய படைப்பாற்றல்களையும் விருத்திசெய்ய பெரிதும் உதவின. இளஞாயிறு, தமிழருவி, விடுதிச்சுடர் என்பன மீண்டும் இடைவிடாது மலர்ந்து படைப்பாளிகளைப் பிரசவிக்கவேண்டும்.

### கல்லூரியின் பல்துறைப் பரிமாணங்கள்

பாடசாலைகளின் முதன்மையான கடமை கல்வி வழங்குதலேயாயினும் போதனை நிலையங்களாக மட்டும் அவை செயற்படுவதில்லை அவ்வாறு செயற்படுவதிலும் பயனில்லை. மாணவர்களின் பல்துறையாற்றல்களையும் திறன்களையும் வளர்த்து ஆளுமைமிக்க முழு மனிதர்களாக்குவதே திறமைமிகு பாடசாலைகளின் பணியாகும். அவ்வகையில் யாழ்ப்பாணக் கல்லூரி தன் பங்களிப்பைச் சிறப்பாக வழங்கிவந்துள்ளது. கல்லூரிக்குப் பெருமைசேர்ப்பவற்றுள் விளையாட்டுத்துறை முக்கியமானதாகும். துடுப்பாட்டம், உதை பந்தாட்டம், கூடைப் பந்தாட்டம், ஹொக்கி, வலைப் பந்தாட்டம், ரெனிஸ் உள்ளிட்ட உள்ளக விளையாட்டுகள் பலவற்றிலும் கல்லூரி மாணவர்கள் சிறந்து விளங்கினர். யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் யாழ். சம்பந்தரசியார் கல்லூரிக்குமிடையில் வருடாந்தம் 'பொன்னணிகளின் போர்' என்ற பெயரில் நடைபெறும் துடுப்பாட்ட, உதை பந்தாட்டப் போட்டிகள் பிரபலமானவை. மீண்டும் பலதரப்பட்ட விளையாட்டுக்களையும் கல்லூரியில் கட்டியெழுப்ப வேண்டிய தேவையுள்ளமை கவனிக்கப்படவேண்டியதாகும். வருடாந்தம் நடைபெறும் கிராமங்களினூடாக ஓடுதலும் பிரபல்யமானதாயிருந்த நிகழ்வாகும்.

மாணவர்களை கலை, இலக்கிய, சமய விழுமிய, சமூகச் செயற்பாடுகளில் ஈடுபடுத்தி முழுமையானவர்களாக உருவாக்குவதில் கல்லூரியின் மன் றங்களின் பங்கு அளப்பரியதாகும். ஆசியாவின் முதலாவது மாணவர் கிறிஸ்தவ வாலிபர் சங்கம் யாழ்ப்பாணக் கல்லூரியில் நிறுவப்பட்டது. இது 1884ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. 1939ஆம் ஆண்டில் கல்லூரி கிறிஸ்தவ வாலிபர் சங்கத்திற்கான கட்டடம் திறந்துவைக்கப்பட்டது. 1915ஆம் ஆண்டில் யாழ்ப்பாணக் கல்லூரியில் சாரணர் இயக்கம் செயற்படத்தொடங்கியதாகத் தெரிகிறது. எனினும் யாழ்ப்பாண மாவட்டத்தில் 1916ஆம் ஆண்டில் சாரணீயம் உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டபோது, யாழ்ப்பாணத்தின் ஏனைய நான்கு பாடசாலைகளோடு சேர்ந்து மாவட்ட சாரணீய உருவாக்கத்தில் யாழ்ப்பாணக் கல்லூரி பங்கெடுத்து '3ஆவது யாழ்ப்பாணம்' என்ற பதிவு இலக்கத்தையும் பெற்றுக்கொண்டது. சாரணீயர் இயக்கம், லியோ கழகம், கிறிஸ்தவ மாணவர் மன்றம் முதலான அமைப்புகளும் செயற்பட்டன. வகுப்பு ரீதியான மாணவர் மன்றங்கள் முறையாகச் செயற்பட்டு மாணவர்களின் முழுமையான வளர்ச்சிக்குப் பங்களித்தன. Lyceum, Forum, Brotherhood என்பன கனிஷ்ட இடைநிலை வகுப்பு மாணவர்களுக்கான மன்றங்களாகச் செயற்பட்டன. உயர்தர மாணவர் மன்றம் 1924ஆம் ஆண்டு முதல் செயற்பட்டுவருகின்றது. யாழ்ப்பாணக் கல்லூரித் தமிழ் மன்றம் முக்கியத்துவமுள்ள ஒரு அமைப்பாகும். தமிழ் மன்றம் வருடாந்தம் பாரதி விழாவினைச் சிறப்பாக நடாத்திவருகிறது. கல்லூரியின் ஆரம்பப் பிரிவினால் வருடாந்தம் காந்தி விழா நடாத்தப்படுகிறது. இவ்விரு விழாக்களும் கல்லூரியின் அடையாளங்களாக மாறிவிட்டன என்றால் மிகையல்ல. யாழ்ப்பாணத்தில் தொழினுட்ப வசதிகள் வளர்ச்சியடையாத அக்காலத்திலேயே (1984இல்) 'கல்லூரி வசந்தத்தில்' என்ற திரைப்படத்தை கல்லூரித் தமிழ் மன்றம் சிறப்பாகத் தயாரித்திருந்தது.

### கல்லூரியின் புகழ்பூத்த மாணவர்கள்

பாடசாலைகளின் பெறுமதியை உணர்த்துகிறவர்களாகவும் புகழைக் காலந்தோறும் நிலைபெறச் செய்பவர்களாகவும் விளங்குபவர்கள் பாடசாலைகளின் பிரசவங்களாக அமையும் மாண வர்களே. மாணவர்களுக்காகத்தான் பாடசாலைகள். பாடசாலைகளால்தான் மாணவர்கள் வாழ்வுபெறுகிறார்கள். மாணவர்களால்தான் பாடசாலைகளின் வாழ்வு அர்த்தம்பெறுகிறது. யாழ்ப்பாணக் கல்லூரித் தாயும் தன் பிள்ளைகளால் வளம்பெற்றவள். பெருமைகொண்டவள். இன்று உலகெங்கும் பரந்து வாழும் கல்லூரியின் பழைய மாணவர்கள் வாழ்வில் உயர்ந்து, தமக்கும் சமூகத்திற்கும் பயனுள்ளவர்களாகக் கல்லூரிக்குப் புகழ்சேர்க்கிறார்கள். அவர்கள் எல்லோரையும் இச்சிறு கட்டுரையில் குறிப்பிடுவதென்பது சாத்தியமானதல்ல. யாரையும் குறிப்பிடாதுவிடுவதும் உவப்பானதல்ல. எனவே வகைமாதிரிக்காகச் சிலரை இக்கட்டுரை சுட்டிக்காட்டுகிறது. தமிழிலக்கியப்பரப்பில் அளவிடற்கரிய பணியாற்றிய, பதிப்புத்துறையின் முன்னோடியாக அறியப்படும் சி.வை.தாமோதரம்பிள்ளையும் தமிழறிஞர் கறோல் விசுவநாதம்பிள்ளையும் பற்றிக்கோட்டா மிஷனரியில் பயின்றவர்கள். இவர்கள் இருவரும் சென்னைப் பல்கலைக்கழகத்தின் முதன்மைப் பட்டதாரிகளாக வெளியேறி மிஷனறிக்குப் புகழ் சேர்த்தனர். தமிழறிஞர் ஆனல்ட் சதாசிவம்பிள்ளை, வானியலாளரான அலன் ஏபிரகாம், பேராசிரியர்களான எஸ். அரசரடணம், கே. அருளானந்தன், கா. இந்திரபாலா முதலியோரும் வரலாற்றாய்வாளர் சீலன் கதிர்காமர், பத்திரிகையாளர்களான சுப்பிரமணியம் சிவநாயகம், டி.பி(ட).எஸ் ஜெயராஜ், பி(ட).எச்.எஸ். ஜெயவர்த்தன, என். சிவநேசச்செல்வன் முதலியோரும் செனட்டர்களான எஸ். ஆர். கனகநாயகம் மற்றும் பி. நாகலிங்கம், அரசியல்வாதிகளான க. பாலசிங்கம் (இலங்கை சட்டவாக்கசபை உறுப்பினர்), வைத்திலிங்கம் துரைச்சாமி (இலங்கை அரசாங்கசபை சபாநாயகர்), அ. வைத்திலிங்கம் (கல்விமான்), ஹண்டி பேரின்பநாயகம் (கல்விமான்), எஸ்.ஏ. ரஹீம் (நாடாளுமன்ற உறுப்பினர்-மன்னார்), க. துரைரத்தினம் (நாடாளுமன்ற உறுப்பினர்-பருத்தித்துறை), தந்தை செல்வா என அறியப்படும் எஸ்.ஜே.வி. செல்வநாயகம் (நாடாளுமன்ற உறுப்பினர்-காங்கேசன்துறை) முதலியோரும் யாழ்ப்பாணக் கல்லூரியின் பழைய மாணவர்களாவர். தேர்தல் ஆணையாளராகப் பதவிவகித்த ஏ. அருள்பிரகாசம், சிரேஷ்ட பிரதிக் கணக்காய்வாளர் நாயகமாகப் பதவிவகித்த ஏ. குணநாயகம், பிரதி தலைமை சட்ட அதிகாரியாக விளங்கிய ஏ. ஞானதாசன் முதலியோரும் யாழப்பாணக் கல்லூரியின் பழைய மாணவர்களே. விளையாட்டு வீரர்களான எஸ். சோதிலிங்கம், பாலசுப்பிரமணியம் (ஹொக்கி பாலா) போன்றோரும் கல்லூரிக்குப் புகழ் தேடித்தந்துள்ளனர். இன்று இலங்கையில் சிறப்புறப் பணியாற்றும் பேராசிரியர்களான எஸ். நோபிள் சுரேந்திரன், ஜெ. பிறின்ஸ் ஜெயதேவன் முதலியோரும் வைத்திய நிபுணர்களான ஜி. சுஜாகரன், வி. வீரசுதன் முதலியோரும் யாழ்ப்பாணக் கல்லூரியின் புதல்வர்களாவர். இன்னும் கல்வித்துறையிலும் சட்டத்துறையிலும் மருத்துவத்துறையிலும் நிர்வாகத்துறையிலும் கணக்கியல், பொறியியல், தொழினுட்பம், வர்த்தகம் எனப் பல்வேறு துறைகளிலும் பலர் பிரகாசித்துவருகின்றனர். இவ்வாறு யாழ்ப்பாணக் கல்லூரிக்குப் புகழ் சேர்த்தவூ சேர்க்கும் பழைய மாணவர்களின் பட்டியல் நீளமானது. பற்றிக்கோட்டா செமினறியாகக் கருக்கொண்டு, யாழ்ப்பாணக் கல்லூரியாக மலர்ந்து மாணவர்கள் பலரை உருவாக்கி யாழ்ப்பாணத்தையும் தமிழரையும் கல்வியால் தலைநிமிர வைப்பதில் அளப்பெரிய பங்காற்றிய கல்வி நிறுவனம் தனது பயணத்தின் இருநூறாவது ஆண்டைப் பூர்த்திசெய்கிறது என்பது சாதாரண விடயமல்ல. அமெரிக் மினரிகள் எமக்களித்த இப்பொக்கித்திற்காக நாம் காலமெலாம் கடன்பட்டுள்ளோம். யாழ்ப்பாணக் கல்லூரி என்ற பெருவிருட்சத்தை பேணிப்பாதுகாத்து, விருத்தி செய்து அடுத்தடுத்த சந்ததிகளுக்கும் பயன்படுமாறு வளப்படுத்துவது பயன்கொண்ட அனைவரதும் கடனாகும். யாழ்ப்பாணச் சமூகத்தின் பொறுப்புமாகும்.

(கட்டுரையாளர் சியன தேசிய கல்விக் கல்லூரி விரிவுரையாளர் என்பதுடன் கல்லூரியின் பழைய மாணவருமாவார்)

காலைக்கதிர் Kalaikkathir

# பெரும்பாலான மக்களுக்கு இன்னும் மகிந்த மீது பெரும் நம்பிக்கையுண்டு

## நம்புகிறார் இந்திக அனுருத்த

எமது தலைவர் மஹிந்த ராஜபக்ஷ மீது பெரும்பான்மை மக்கள் இன்றும் நம்பிக்கை கொண் டுள் ளார்கள். எதிர்வரும் காலங்களில் இடம்பெறவுள்ள தேர்தல்களில் ராஜபக்ஷர்கள் தலைமையிலான அரசாங்கத்தை நிச்சயம் தோற்றுவிப்போம் என மின்சாரத்துறை இராஜாங்க அமைச்சர் இந்திக அனுருத்த தெரிவித்தார்.

கந்தானைப் பகுதியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது மேற் கண்டவாறு குறிப் பிட்டார்.

அவர் மேலும் தெரி வித்ததாவது:

கட்சி என்ற ரீதியில் கடந்த ஆண்டு பாரிய நெருக்கடி களை எதிர்கொண்டோம். மக்களாணையுடன் ஆட்சிக்கு வர முடியாத மக்கள் விடுதலை முன் னணி போராட்டத்தின் ஊடாக ஆட்சியமைக்க இளைஞர்களைத் தவறாக வழிநடத்தியது. ஜனநாயக போராட்டத்தை மக்கள் விடுதலை முன்னணியினர் பயங்கரவாத போராட்டமாக மாற்றி யமைத்தார்கள்.

இளைஞர்கள் பயங் கரவாதிகள் போல் செயற்படும் சூழலை மக்கள் விடு தலை முன்னணியினர் தோற்றுவித்தார்கள்.

விடுதலை புலிகள் அமைப்பாலும், மக்கள் விடுதலை முன்னணியாலும் நாட்டுக்கு ஏற்பட்ட அழிவை மதிப்பிட முடி யாது. முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மே மாதம் நாட்டை விட்டு வெளியேறினார். யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்து நாட்டில் சுதந்திரத்தை உறுதிப்படுத்திய ராஜபக்ஷக்கள் கடுமையாக விமர் சிக்கப் பட்டார்கள். ஆரம்பத்தை மறந் துவிட்டு முறையற்ற வகையில் செயற் பட்டார்கள்.

எமது தலைவர் மஹிந்த ராஜபக்ஷ மீது பெரும்பான்மை மக்கள் இன்றும் நம்பிக்கை கொண்டுள்ளார்கள். எதிர்வரும் காலங்களில் இடம் பெறவுள்ள தேர்தல்களில் ராஜபக்ஷர்கள் தலைமையிலான அரசாங்கத்தை நிச்சயம் தோற்றுவிப்போம்.



பொருளாதாரப் பாதிப்பு தீவிரடைந்தபோது அரசாங்கத்தை பொறுப்பேற்காமல் தப்பிச் சென்ற எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையிலான அணியினர் தற்போது அரசாங்கத்தின் செயற்பாடுகளை விமர்சிக்கிறார்கள். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தை தொடர்ந்து முன்னெடுத் துச் செல்ல ஒத்துழைப்பு வழங்குவோம். பொருளாதாரப் பாதிப்பில் இருந்து மீட்சியடைந்ததன் பின்னர் அரசியல் தொடர்பாக அவதானம் செலுத்தலாம். எதிர்வரும் ஆண்டு தேசிய தேர்தல் இடம்பெறும். அப்போது கட்சி என்ற ரீதியில் செயற்பாட்டு அரசியலில் ஈடுபடுவோம். - என்றார்.

(05)

# சாய்ந்தமருதில் சிப்தொற புலமைப் பரிசில் நிகழ்வு

சாய்ந்தமருது பிரதேச செயலக பிரிவில் சமுர்த்தி நிவாரணம் பெறும் குடும் பங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட (22/24) ஆம் கல்வி ஆண்டில் உயர்தர வகுப்பில் கல்வி கற்கும் 68 மாணவர்களுக்கு 04 மாதங்களுக்கு தலா 6000 ரூபா பெறுமதியான சிப்தொற புலமைப் பரிசில் வழங்கும் நிகழ்வு சாய்ந்தமருது பிரதேச செயலக சமுர்த்தி தலைமைப் பீட முகாமையாளர் ஏ.சி.ஏ. நஜீமின் நெறிப்படுத்தலில் பிரதேச செயலாளர் எம்.எம். ஆசிக் தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் எம்.எஸ். சப்றாஸ் கலந்து கொண்டமையுடன் அதிதிகளாக சாய்ந்தமருது உதவி பிரதேச செயலாளர் எம்.ஐ.முவா/பிகா, கணக்காளர் ஏ.ஜே. நுஸ்ரத் பானு, நிர்வாக உத்தியோகத்தர் எம்.என்.எம்.றம்ஸான், நிர்வாக கிராம உத்தியோகத் தர் எம்.எஸ். நளீர், சமுர்த்தி முகாமைத்துவ பணிப்பாளர் றியாத் ஏ மஜீத், சமுர்த்தி வங்கி முகாமையாளர் ஐ.எல்.ஹிதாயா, பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் எம்.எம். சமூன், நிதி உதவியாளர் ஏ.சி. முஹம்மட், திட்டமிடல் பிரிவு பிரதான முகாமைத்துவ சேவை உத்தியோ கத்தர் எம்.எஸ்.எம். றியாஸ், சமுர்த்தி சமூக பாதுகாப்பு விடய உத்தியோகத்தர் எல்.ஜி.எம்.ஜே.மரியம், சமுர்த்தி சமூக அபிவிருத்தி உதவியாளர் யூ.எல்.ஐ/பர், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் என பலர் கலந்துகொண்டனர் .

இதன் போது சாய்ந்தமருது பிரதேச தனவந்தர் ஒருவரால் 68 மாணவர்களுக்கும் அப்பியாசகொப்பிகளும் வழங்கி வைக்கப்பட்டன. (05)

# திருமலை மாணவர்களுக்கு இணைந்த கரங்களால் உதவி

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள கிண்ணியா விபுலானந்த வித்தியாலயத்தில் கல்வி கற்கும் 56 பாடசாலை மாண வர்களுக்கும் மற்றும் திருகோணமலை பாரதி தமிழ் வித்தியாலயத்தில் கல்வி கற்கும் 50 மாணவர்களுக்கும் இணைந்த கரங்கள் அமைப்பால் கற்றல் உபகரணங்கள் மற்றும் புத்தகப்பை என்பன பாடசாலையின் அதிபர்களான செ. சத்தியசீலன் மற்றும் திருமதி சுஜந்தினி யுவராஜா ஆகியோர் தலைமையில் வழங்கி வைக்கப்பட்டன.

திருகோணமலை மாவட்ட கல்வி வலயத்தில் உள்ள பாட சாலைகளில் மிகவும் அதி கஷ்ட, தொழில் வாய்ப்பற்ற குடும்ப மாண வர்களுக்கு இணைந்த கரங்கள் அமைப்பால் இந்த கற்றல் உபகரணங்கள் மற்றும் புத்தகப்பைகள் வழங்கி வைக்கப்பட்டன.

இணைந்த கரங்கள் அமைப்பின் இணைப்பாளர்களான சி.காந்தன், மா. ஜெயநாதன், சிருஸ்காந்த் சதீஸ்குமார், ஆகியோர் கலந்து கொண்டு இரு பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களை வழங்கி வைத்தனர்.

இந்நிகழ்வில் பாடசாலையின் ஆசிரியைகளான திருமதி க.சத்தியசீலன், திருமதி அ. பிரதீபா, க. சிறிதரன், அ.அலெக்சாண்டர், அ. ரவிக்குமார் மேலும் பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்று சங்க செயலாளர் அ. சங்கீர்த்தன் மற்றும் பெற்றோர்கள், மாணவர்கள் என பலர் வருகை தந்திருந் தனர்.

இணைந்த கரங்கள் அமைப்பு கல்விற்கான சேவையை ஆரம்பித்து ஒரு வருட காலத்தில் நூற்றுக்கு மேற்பட்ட பாடசாலை களிலிருந்து ஆயிரக் கணக்கான மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் மற் றும் புத்தகப்பை என்பன வழங்கி அவர்களின் கல்விச் செயற்பாட்டை முன்னெடுக்க உதவி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(05)


குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City

கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்

பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு

15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!

சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்



அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்

(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)

பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா,

ரம்போடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்

தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்

Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park

கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம்,

ரம்போடை ஆஞ்சனேயர் கோவில்



தொடர்புகளுக்கு: 0777 43 5557

தனியான வாகன தரிப்பிட வசதி

முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை

தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு

மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி

உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்

தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்

சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/-

பரப்பு 20 இலட்சம்

5th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்

Good Gift Property Developers (Pvt) Ltd



# முத்தமிழ் மன்றம் - சௌத்தென்ட்

பெருமகிழ்வுடன் நடாத்தும்

# வருடாந்த மெய்வல்லுநர் போட்டி 2023

இப்போட்டிகளில் பங்கேற்கும் மாணவச் செல்வங்களுக்கு உற்சாகமூட்டவும், அவர்களைத் தட்டிக் கொடுக்கவும், நமது பாரம்பரிய விளையாட்டுகளை கண்டுகளிக்கவும் தங்களை தங்கள் குடும்பத்தாருடன் வருகை தருமாறு அன்புரிமையோடு அழைக்கின்றோம்.

இடம்:
St. Mary's, Prittlewell, C of E Primary School,
Boston Avenue, Southend-On-Sea, SS2 6JH

நாள்:
**15.07.2023 சனிக்கிழமை**

நேரம்:
**காலை 10:00 மணிமுதல்**

போட்டிகளில் பங்கேற்கவும், மேலதிக தொடர்புகளுக்கும்:

குகன் - 0795 744 1521
ஜோ - 0795 803 8037
செல்வம் - 0799 048 4929
தயா - 0753 569 2693
mmsouthend@gmail.com
www.southendtamils.com

தமிழால் நம் உறவு
தமிழால் நம் உயர்வு

காலைக்கதிர் Kalaikkathir




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 13.07.2023இல் வெளியிடப்பெற்றது.